ISSN 1391-9504

# விஜய்

Vijey விජය

21.06.2017 - மலர் 14, இதழ் 17







# சுவர்-பத்திரிகை தயாரிப்பது எவ்வாறு...?

விலை ரூபா 15/-



கல்வி அமைச்சு - கலாசார திணைக்களம் நடாத்தும்

- சஞ்சிகை தெரிவுப் போட்டி
- சிறுவர் கதைப் போட்டி

விபரங்கள் உள்ளே

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வதற்கு தகுதியான சூழல் இல்லாத போதிலும் இயற்கை சுற்றாடலுக்கு ஏற்ப தம்மைத் தகவமைத்துக் கொண்டு எதிரிகளிடமிருந்து ம்றைந்து வாழவும், இரைகளைப் பிடிக்கவும் தமது ஆற்றலை வளர்த்துக் கொள்வது விலங்குகள் உலகில் காணப்படும் பொதுவான ஒரு விடயமாகும். ஆனால் நச்சுத் தன்மை வாய்ந்த உயிரினங்களினால் இவ்வாறு மறைந்து வாழ முடியாது. நச்சுத் தன்மை வாய்ந்த உயிரினங்கள் இயற்கையிலேயே மிகவும் பிரகாசமான மஞ்சள் அல்லது சிவப்பு நிறத்தினைக் கொண்டிருக்கின்றன. எனவே, இத்தகைய உயிரினங்கள் பலதரப்பட்ட உபாயங்களைப் பின்பற்றியே தம்மைக் காக்கின்றன. இதன் ஓர் உபாயமாகவே, சில உயிரினங்கள் நஞ்சினைக் கக்கி தம்மை தற்காத்துக்கொள்கின்றன. அவை பற்றிய சில விபரங்கள் வருமாறு;








# நச்சுத் தன்மை வாய்ந்த உயிரினங்களின் கதை







## நச்சுத் தன்மை வாய்ந்த உயிரினங்கள்

நச்சுத் தன்மை வாய்ந்த உயிரினங்கள் Poisonous என்றும் Venomous என்றும் அழைக்கப்படுகின்றன. பாம்புகள், தேள்கள் என்பன தற்பாதுகாப்புக்காக நஞ்சை வெளியேற்றுகின்றன. பிற உயிரினங்களைத் தீண்டுவதன் மூலம் நஞ்சைச் செலுத்தி தம்மை அவை தற்காத்துக் கொள்கின்றன. இவை எதிரிகளினால் தாக்கப்படும் போது, மட்டுமே நஞ்சை வெளியேற்றுகின்றன. இதனால் இவற்றை Poisonous என்று கூறுகின்றனர். ஏனைய வகை உயிரினங்கள் போன்று இவை தம்மை பாதுகாத்துக் கொள்ள மறைந்து வாழவேண்டிய அவசியம் இல்லை. அத்துடன், பெரும்பாலான உயிரினங்கள் இயற்கையின் எச்சரிக்கை நிறங்களான பிரகாசம் மிகுந்த சிவப்பு, மஞ்சள் மற்றும் கறுப்பு நிறத்தினைக் கொண்டுள்ளன. இதனால் இந்த உயிரினங்களை பார்த்தவுடன் மற்றைய உயிரினங்கள் இவற்றை தவிர்த்து விலகிச் சென்று விடுகின்றன.

## விலங்குகள்

Venomous ரக உயிரினங்கள் நச்சுத் தன்மை வாய்ந்தவை. இவை பல வழிகளில் நஞ்சினை வெளியேற்றுகின்றன. இவ்வகைக்குள் சேரும் உயிரிகள் கொம்புகளில் நஞ்சினைக் கொண்டிருக்கும். ஒரு சில சிலந்திகள் மற்றும் பாம்புகள் இரைகளைத் தீண்டுவதன்மூலம் உணவினைப் பெற்றுக் கொள்கின்றன. தென் அமெரிக்காவின் அமேசன் காட்டில் காணப்படும் அமேசானிய வெட்டுக்கிளிகளிடம் (Amazonian Caterpillar) இவ்வாறான நச்சுத்தன்மை வாய்ந்த மயிரிழைகள் காணப்படுகின்றன.

## நச்சு பாய்ச்சுதல்

ஒன்றுக்கொன்று மாறுபட்ட நச்சு வகைகளைக் கொண்ட 50க்கு மேற்பட்ட மீன் இனங்கள் கடலில் வசிக்கின்றன. முழு உடலிலும் நஞ்சுக் கொண்ட மீன்களும் இவற்றில் அடங்குகின்றன. சில மீன்களுக்கு விஷ கொம்புகளும், முட்களும் உள்ளன. எதிரிகளிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகவே, இயற்கையாக இவை அமைந்துள்ளன. வீவர் மீன் இவ்வாறான கொடிய விஷம் கொண்ட முட்களைக் கொண்டவை ஆகும். இவற்றை இரையாக்கிக் கொள்ளும் உயிரினங்கள் மரணத்தினை தழுவுவது உறுதி.

## நச்சு முறியடிப்பு

இயற்கையாக புதிய மருந்து ஒன்றினைக் கண்டுபிடிக்க ஆய்வாளர்களுக்கு நச்சுத்தன்மை வாய்ந்த உயிரினங்களும், தாவரங்களும் அவசியம் ஆகும். இந்த இயற்கை நச்சுக்களிலிருந்து தான் தற்போது பல மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. உதாரணத்திற்கு மீன்களிலிருந்து பெறப்படும் Saw scaled viper எனும் ஒருவகை நச்சின்மூலம் இரத்தம் கட்டியாகுவதனைத் தடுக்கும் மருந்து உட்பட மேலும் பல மருந்து வகைகளும் தயாரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(-இ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கரை லட்சம் பிள்ளைகள் அறவே பாடசாலை செல்வதில்லை

இலங்கையில் தற்போதைய நிலவரத்தின்படி 4,56,661 பிள்ளைகள் அறவே பாடசாலைக்கு செல்வதில்லை என ஆய்வொன்றின்மூலம் தெரிய வந்துள்ளது. 5-17 வயதிற்கு இடைப்பட்டவர்களே, இவ்வாறு பாடசாலைக்கு செல்லாதிருக்கின்றனர். குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வின் மூலமே இந்த உண்மை

## ஆய்வு அறிக்கை



தெரிய வந்துள்ளது.

இதில் அநேகமானோர் தொழிலுக்கு செல்லல், வறுமை, உடல்நலமின்மை என பல்வேறு காரணங்களினாலேயே பாடசாலை செல்லாதிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. இது விடயமாக அரசாங்கம் கூடிய கவனத்தை செலுத்த வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

# வெல்லுங்கள் மாதம் ஒரு சைக்கிள்!



14 ஆம் வருடத்தை முன்னிட்டு

விஜய்

## நீங்கள் செய்ய வேண்டியது

இந்த மாதத்திற்கான விஜய் பத்திரிகைகளில் வெளிவருகின்ற 'மாதம் ஒரு சைக்கிள்' கூப்பன்களை சேகரித்து அவற்றை ஒன்றிணைத்து மாத இறுதியில் எமக்கு தபாலிடுங்கள். குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு வெற்றிப் பரிசாக சைக்கிள் வழங்கப்படும்.

### விஜய் மாதம் ஒரு சைக்கிள்

மாதம்: ஜூன்
திகதி: 21.06.2017

பெயர் : ..............................
ஆண்/பெண் : ..............................
முகவரி : ..............................
..............................
தொ.பே.இல : ..............................
வயது : ..............................
பாடசாலை : ..............................

பரிசை நேரில் பெற்றுக்கொள்வேன் என உறுதிப்படுத்துகிறேன்

..............................
கையொப்பம்

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணப் பொதி

வெள்ளம் மற்றும் மண்சரிவினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணப் பொதியொன்றை வழங்குவதற்கு கல்வித்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கமைய 3 சீருடைகள், பாதணிகளுக்கென ரூ. 1,500 மதிப்புள்ள வௌச்சர், ஒரு தொகுதி அச்சு நூல்கள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள்,



இதர பாட உபகரணங்கள் ஆகியன இந்த பொதியில் அடங்குகின்றன.

இது தொடர்பான சுற்றறிக்கைகள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், வகுப்புவாரியான விபரங்களுடன், கிராமசேவகர், வகுப்பாசிரியர், அதிபர் ஆகியோரின் அத்தாட்சிப்படுத்தலுடன் பாதிக்கப்பட்ட மாணவர்களின் விபரங்களை அறியத்தருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# சிறந்த பாடசாலை சஞ்சிகை தெரிவுப் போட்டி



பாடசாலை மாணவர்களின் ஆக்கபூர்வமான படைப்பாற்றல்கள் மற்றும் ரசனை, திறன் ஆகியவற்றை மேலும் விருத்தி செய்து திறமைமிகு எதிர்கால சந்ததியொன்றை உருவாக்கும் நோக்கில் கல்வி அமைச்சும், கலாசார அலுவல்கள் திணைக்களமும் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்டத்தின் கீழான பாடசாலை மாணவர்களுக்கான சிறந்த பாடசாலை சஞ்சிகையை தெரிவு செய்யும் போட்டி.....

## போட்டி விதிமுறைகள்

இந்தப் போட்டியில் எந்தவொரு பாடசாலையும் கலந்து கொள்ளமுடியும். 2017 ஆம் ஆண்டுக்கென தயாரிக்கப்பட்ட ஆண்டு அல்லது அரையாண்டு பாடசாலை சஞ்சிகையை இப்போட்டிக்கென முன்னெடுக்கமுடியும். மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்கள் தெரிவுசெய்யப்படவுள்ளது. மொத்தமுள்ள 25 மாவட்டங்களிலும் முதல் இடத்தைப் பெற்ற 25 சஞ்சிகைகளுள் முதல் மூன்று இடத்தைப் பெறும் சஞ்சிகைகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றிற்கு தேசிய மட்டப் போட்டியில் சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும். விண்ணப்பப்படிவத்துடன் உரிய சஞ்சிகையும் எமக்கு அனுப்பப்படல்வேண்டும்.

## நிபந்தனைகள்

01. பாடசாலை மட்டத்தில் இப்போட்டியில் பங்குபற்றமுடியும்.
02. மாணவர்களின் சஞ்சிகையை சமர்ப்பிக்க முடியும்.
03. ஆண்டு அல்லது அரையாண்டு பாடசாலை சஞ்சிகையை இதற்கென சமர்ப்பிக்க முடியும்.
04. கையெழுத்துப் பிரதி வடிவிலான சஞ்சிகைகளையும் சமர்ப்பிக்கமுடியும்.
05. உங்கள் பாடசாலைக்கு உரித்துடைய பிரதேச செயலகத்திலோ அல்லது மாவட்ட செயலகத்திலோ உள்ள கலாசாரப் பிரிவு உத்தியோகத்தரிடம் கையளிக்க முடியும்.
06. போட்டி முடிவுத் திகதி 2017 ஒக்டோபர் 15



அச்சு ஊடக அனுசரணை விஜய்

இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்ட பாடசாலை சஞ்சிகைப் போட்டி
மாதிரி விண்ணப்பப்படிவம்

01. முதலெழுத்துகளுடன் பெயர்:....................
02. பாடசாலை :....................
03. பாடசாலை முகவரி :....................
04. பாடசாலை தொலைபேசி :....................
05. மாவட்டம் :....................
06. பிரதேச செயலகம் :....................
07. சஞ்சிகையின் பெயர் :....................

மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையெனவும் சரியானவை எனவும் இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆக்கம் என்னால் தயாரிக்கப்பட்ட ஆக்கம் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.................................... ....................................
மாணவர் பெயர் கையொப்பம்

எமது பாடசாலையினால் தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட சஞ்சிகையுடனான போட்டி விண்ணப்பத்தை உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கின்றேன்.

அதிபரின் பெயர்:....................
கையொப்பம் :....................
பதவி முத்திரை :.................... திகதி:....................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னனின் பெருந்தன்மை

மன்னர் மகிபானு என்பவர் ஒரு நாள் தனது மந்திரியை அழைத்தார். "மந்திரியாரே! என் நாட்டில் கோழையாக இருப்பவர்கள் யார்? அவர்களை உடனடியாக என் அரச சபைக்கு அழைத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டார்.

மந்திரியாரும் மன்னனின் ஆணையை ஏற்று வீரர்கள் சிலரை அழைத்துக்கொண்டு, ஒரு மலை அடிவாரத்தை அடைந்தார். அங்கே ஒருவன் நின்றுகொண்டிருந்தான். மந்திரியைக் கண்ட அவன், "ஐயா, இந்த மலையைப் பார்க்கவே எனக்குப் பயமாக இருக்கின்றது. நான் வேறு இடத்திற்குச் செல்கின்ற நேரத்தில் இந்த மலை என்மீது விழுந்து விட்டால் நான் என்ன செய்வேன்? இந்த மலை விழுந்தால் எவ்வளவு தூரத்திற்கு விழும் என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கின்றேன்" என்று கூறினான். மலையைக் கண்டு பயப்படும் அந்தக் கோழையை மந்திரி தன்னோடு அழைத்துக் கொண்டு புறப்பட்டார். அப்போது திடீரெனக் குளிர்ந்த காற்று வீசத்தொடங்கியது. அத்தோடு, கன மழை பெய்யத் தொடங்கியது. திடீரென "காப்பாற்றுங்கள்.... காப்பாற்றுங்கள்" என்ற சத்தம் கேட்கவே மந்திரியும் வீரர்களும் நாலா புறமும் சிதறி ஓடினர். ஓரிடத்தில் மழையில் நனைந்தபடி, ஒருவர் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்தார். வீரர்கள் ஓடிச்சென்று அவரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர். அவர் நடுநடுங்கியபடி, அந்த வீரர்களைப் பார்த்து, "ஐயா! இந்த மழை என் உயிரைக் குடித்துவிடும் போல் இருக்கின்றது. எனக்குப் பயமாக இருக்கின்றது" என்று கூறினார்.

மழைக்குப் பயப்படும் அந்த மனிதனையும் தன்னோடு அழைத்துக்கொண்டு மந்திரி அரச சபை நோக்கி நகர்ந்தார்.

செல்லும் வழியில் சற்று இளைப்பாற வேண்டி ஒரு சோலைக்குள் நுழைந்தபோது செடி, கொடிகளின் பின்னே ஒருவன் மறைந்திருப்பதைக் கண்டு, அவனை உடனே தன்னிடம் அழைத்து வருமாறு தன் வீரர்களிடம் மந்திரி கட்டளையிட்டார். வீரர்களும் அந்த மனிதனைப் பிடித்து வந்து மந்திரி முன் நிறுத்தினர். அந்த மனிதன் மந்திரியின் காலில் விழுந்து,



"ஐயா! நான் எந்தத் தவறும் செய்யவில்லை பலமான காற்றை நினைத்தாலே எனக்குப் பயம், அதனால்தான் செடி, கொடிகளுக்குப் பின்னே ஒளிந்து கொண்டிருந்தேன்" என்று கூறினான்.

இந்த வேடிக்கையான மனிதனையும் மந்திரி தன்னோடு அழைத்துக் கொண்டு புறப்பட்டார். அப்போது ஒரு வீரன் இன்னொரு இளைஞனை அங்கு அழைத்து வந்து மந்திரியை வணங்கி, "பிரபு! இவன் எந்நேரமும் தனது கை, கால்களை ஆட்டியபடி ஏதோ புலம்பியபடியே இருக்கிறான். இவன்மீது எனக்குச் சந்தேகம் ஏற்படவே தங்களிடம் அழைத்து வந்தேன்" என்று கூறினான்.

அந்த இளைஞனும், "ஐயா! என்னை ஒன்றும் செய்து விடாதீர்கள். எனக்கு எப்போது இறப்பு வருமோ என்று நினைத்து ஒவ்வொரு நிமிடமும் பயத்தில் இறந்துகொண்டு இருக்கின்றேன். இதில் நீங்களும் பயம்காட்டி என்னைக் கொன்று விடாதீர்கள்" என்று அழ ஆரம்பித்துவிட்டான்.

மந்திரி அவனையும் தன்னோடு அழைத்துக் கொண்டு, அரச சபைக்கு சென்றார். அங்கு மன்னர் அனைவரின் விபரங்களையும் கேட்டார். மந்திரியார் நால்வரின் விபரங்களையும் மன்னனிடம் தெளிவாக எடுத்துச் சொன்னார். "மந்திரியாரே! என் ஆட்சியில் இப்படிப்பட்ட ஆட்கள் இருப்பது எனக்குத்தான் அவமானம் அதனால் இவர்களை வீரமிக்க, விவேகம் மிக்க மனிதர்களாக மாற்றியாக வேண்டும்" என்று கூறிய மன்னர் அந்நால்வரின் பயத்தைப் போக்கி நல் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க ஒரு நல்ல குருவிடம் அவர்களை ஒப்படைத்தார்.

# தன் வினை தன்னைச் சுடும்

ஒரு காட்டில் நரி ஒன்று வாழ்ந்து வந்தது. அது பிற விலங்குகளுடன் நட்புடன் பழகிவந்தது. ஆனால், பழகிய பின்னர் அவற்றையே ஏமாற்றித் தனக்கு உணவாக்கிக் கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தது.

ஒரு நாள் மான் ஒன்று புல் வெளியில் உலாவிக் கொண்டிருப்பதை அந்த நரி கண்டது. உடனே அதன்



நாவில் எச்சில் ஊறியது. இந்த மானை எப்படியாவது சூழ்ச்சி செய்து கொன்று சாப்பிடவேண்டும் என்று நினைத்தது. அதனால் விரைந்து செயற்பட்டது. சற்றுத் தொலைவில் ஒரு புதைகுழியைத் தோண்டியது. பின்னர், கிளைகளையும் இலைகளையும் கொண்டு அந்தக் குழியை மூடியது. அதனைத் தொடர்ந்து மான் இருந்த புல் வெளியைத் தேடி ஓடியது.

மானைக் கண்டதும் அதனருகில் சென்று, "மானே! நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா?" என்றது.

மானும் கர்வத்துடன், "அதுதான், எனக்குத் தெரியுமே!" என்றது. "ஆனால், உன்னைவிட இந்த உலகம் அழகானது தெரியுமா?" என்று கூறியது நரி. "நீ என்ன சொல்கிறாய்?" என்ற கேட்டது மான்.

"மானே! சற்றுத் தொலைவிற்குச் சென்றால் மிகப் பெரிய நீர்வீழ்ச்சி ஒன்று உள்ளது. அது எவ்வளவு அழகு தெரியுமா? இன்னும் சிறிது தூரம் சென்றால் பரந்து விரிந்த ஆலமரம் ஒன்று உள்ளது. பல ஏக்கர் நிலப்பரப்பைத் தனக்குள் அடக்கியுள்ளது. அதன் அழகினை சொல்வதென்றால் வார்த்தைகளே இல்லை. அவ்வளவு அழகானது என்று சொல்கின்றேன்" என்றது.

மான் நரியையே பார்த்தது. நரி மீண்டும் பேசியது. "மானே! நீதான் அழகு என்ற கர்வத்தை முதலில் விடு, அழகான உலகத்தை உனக்கு காட்டுகிறேன், என்னுடன் கிளம்பி வா" என்றது. மானும் ஆசையுடன் அழகிய உலகைப் பார்ப்பதற்கு நரியின் பின்னால் சென்றது. நிறையக் கதைகளை அளந்து விட்டுக் கொண்டே நரி சென்றது. மானும் அந்த பொய்யுரைகளில் மயங்கி வியந்து போய் நடந்தது.

சரியாகத் தான் தோண்டிய குழியின் அருகினில் மானை அழைத்து வந்துவிட்டது நரி. அப்போது, அருகில் சிங்கம் ஒன்றின் கர்ஜனை கேட்டது. உடனே மான் துள்ளிக் குதித்து வேகமாக ஓடத் தொடங்கியது. நரியோ செய்வதறியாது அங்குமிங்குமாக அல்லாடியது இறுதியாக தான் தோண்டிய குழிக்குள்ளேயே தவறி விழுந்துவிட்டது.

சிங்கம் குழியின் அருகே வந்து எட்டிப் பார்த்தது. நரி நடுங்கியபடி உள்ளே கிடந்தது. சிங்கம் சாகவசமாக குழிக்குள் குதித்தது. அப்போது நரி "நான் வஞ்சகமாக வெட்டிய குழியிலேயே வீழ்ந்து நானே சிங்கத்துக்கு இரையாகப்போகிறேனே" என்று எண்ணியது. சிங்கமும் சிறிதும் இரக்கம் இன்றி நரியை வேட்டையாடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் மிகு ரமழானின் இறுதிப் பத்தில்...



**அல்லாஹுத்தஆலாவினால் அவனது அடியார்களுக்காக வழங்கப்பட்டுள்ள மிகச் சிறந்த மாதமான ரமழான் மாதமே இது. அல்லாஹுத்தஆலாவின் கட்டளைக்கேற்ப இந்த மாதம் முழுவதும் உலகவாழ் முஸ்லிம்கள் நோன்பிருப்பார்கள். அதனை பின்வரும் அல்குர்ஆன் வசனங்கள் விளக்குகின்றன.**

**விசுவாசம் கொண்டோரே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும் நோன்பு (நோற்பது) கடமையாக்கப்பட்டிருக்கின்றது. (அதனால்) நீங்கள் (உளத் தூய்மை பெற்று) பயபக்தியுடையோர் ஆகலாம்.**

**(அல்குர்ஆன் 2:183)**

**ரமழான் மாதம் எத்தகையதெனின், அதில்தான் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும் நேர்வழி பெறக்கூடியதாகவும், (சத்திய அசத்தியத்தைப் பிரித்தறியக்கூடியதாகவும் உள்ள குர்ஆன் இறக்கியருளப்பட்டது. எனவே, உங்களில் எவர் அம்மாதத்தைப் பெறுகிறாரோ அவர் அதில் நோன்பு நோற்றுவிடவும்.**

**(அல்குர்ஆன் 2:185)**

இத்தகைய சிறப்பு மிக்க ரமழான் மாதத்தின் இறுதிப் பத்தில் இருக்கின்றோம். எனவே, அருள் நிறைந்த புனித மாதத்தின் எஞ்சியுள்ள நாட்களின் ஒவ்வொரு நொடியையும் நன்மையான காரியங்களுக்காக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ரமழானின் இறுதிப் பத்து நாட்களும் மிகவும் முக்கியமானவையாகும். இறுதிப் பத்தின் ஒற்றைப்படை நாட்களில் ஓர் இரவில்தான் புனித அல்குர்ஆன் அருளப்பட்ட ஆயிரம் மாதங்களைவிடச் சிறந்த இரவு (லைலத்துல் கத்ர்) அமைந்துள்ளது. இது பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறியிருப்பதாவது: ''ரமழானின் இறுதிப் பத்தில் லைலத்துல் கத்ரைத் தேடிக்கொள்ளுங்கள். எவர் அந்த இரவில் விசுவாசத்துடனும் நன்மையை நாடியும் நின்று வணங்குகின்றாரோ, அவரது முன்னைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும்''

(ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்)


எனவே, இந்த நாட்களில் அல்குர்ஆனை அதிகமதிகம் ஓதுவதோடு - அதனை பொருள் விளங்கி ஓதும்போது நாம் மேன்மையடைந்தவர்களாவோம். மேலும், இந்த தினங்களில் தொழுகைகளை அதிகம் நிறைவேற்றி, அல்லாஹுத்தஆலாவிடம் பாவமன்னிப்பு தேடல், பிரார்த்தனைகள் புரிதல் போன்ற



நற்காரியங்களிலும் எம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

ஏனெனில், ரமழான் மாதம் என்பது உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் மனிதனை செப்பனிடும் மாதமாகும். இறையச்சம், உளத் தூய்மை, பிறருக்கு உதவும் மனப்பான்மை, பொறுமை, தீய செயல்கள் மற்றும் தீய எண்ணங்களில் இருந்து முற்றாக விலகிக்கொள்ளல், தொழுகைகளை நேரத்திற்கு நிறைவேற்றல், அல்குர்ஆன் கூறுவதன்படி, வாழ்க்கையை அமைத்துக்கொள்ளல் போன்ற பல்வேறுபட்ட நல்ல செயல்களுக்காக நம்மை பழக்கப்படுத்துகின்ற ஒரு மாதமாகவே ரமழான் காணப்படுகின்றது. இந்த மாதம் முழுவதும் தீயவற்றிலிருந்து விலகி நற்செயல்களை மட்டுமே கடைப்பிடித்து வாழும்போது, நாம் நேர்வழி பெற்றவர்களாக மாறுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். அந்த சந்தர்ப்பத்தைத் தான் ரமழான் நமக்கு வழங்குகின்றது.

**'ரமழானின் இறுதிப் பத்து நாட்களும் மிகவும் முக்கியமானவையாகும். இறுதிப் பத்தின் ஒற்றைப்படை நாட்களில் ஓர் இரவில்தான் புனித அல்குர்ஆன் அருளப்பட்ட ஆயிரம் மாதங்களைவிடச் சிறந்த இரவு அமைந்துள்ளது'**




## நோன்புப் பெருநாள்

ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று, ஷவ்வால் மாத தலைப்பிறை பார்த்ததையடுத்து, நோன்புப் பெருநாள் கொண்டாடப்படுகின்றது. பெருநாள் தினத்தில் அதிகாலையில் நீராடி புத்தாடையோ அல்லது ஆடைகளில் சிறந்ததையோ அணிவது சுன்னத்தாகும். பெருநாள் தொழுகைக்குச் செல்லும் முன்னர் காலை உணவையோ அல்லது ஒற்றைப்படையாக பேரீச்சம்பழத்தையோ உட்கொண்டுவிட்டு செல்வது நபி வழியாகும்.

*அனைவருக்கும் புனித நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சுவர் பத்திரிகையின் இயல்புகள்

- இலகுவாக வாசிக்கக் கூடிய வகையில் எட்டும் உயரத்தில் சுவர் பத்திரிகை தொங்க விடப்படல் வேண்டும்.
- 4 அடி தூரத்தில் இருந்து வாசிக்கக் கூடியவாறு பெரிய எழுத்துக்களை பயன்படுத்த வேண்டும்.
- பலதரப்பட்ட நிறங்கள் பயன் படுத்தப்படலாம்.
- சித்திரங்கள், கார்ட்டூன்கள், புகைப்படங்களுடன் பல தரப்பட்ட விடயங்களை இணைக்கலாம்.
- நடந்து செல்லும் வழியே நின்று விரைவாக வாசிக்கக் கூடியதாக பத்திரிகை அமைதல் வேண்டும்.

## சுவர் பத்

பெயர்- கவரும்
இருக்க

வெளியீட்டாளர்

திகதி- வெளியீ
வேண்டு
15ஆம்
அமைத

தொகுப்பாளர்கள்

தொகுப்பாசிரிய

செய்தி- ... ா
பிரதா

உள்ளடக்கம்- சி
சி
ெ

# 'சுவர் பத்திரிகை' எவ்

**பாடசாலை மாணவர் செயற்பாட்டில் 'சுவர் பத்திரிகை' முக்கியமான இடத்தினை வகிக்கின்றது. சுவர் பத்திரிகை மாணவர் ஆக்கத்திறனை வெளிப்படுத்தும் ஒரு சிறந்த படைப்பாக உள்ளது. 'பிரிசில் போர்ட்' ஒன்றில் மாணவர்களின் பலவிதமான எழுத்து மற்றும் ஓவியப் படைப்புக்களை அமைப்பதன்மூலம் இந்த சுவர் பத்திரிகை வடிவமைக்கப்படுகின்றது. இத்தகைய சுவர் பத்திரிகையொன்றை எவ்வாறு அமைப்பது என பார்ப்போம்.**

## அமைப்பு முறைகள்

சுவர் பத்திரிகை உருவாக்கத்தில் இரண்டு வழிமுறைகள் கையாளப்படுகின்றன. ஒன்று நிரலிடுதல் மற்றையது மெருகூட்டல் எனப்படும். முதலில் பென்சிலினால் கோடுகளை வரைந்து கற்பனை வடிவை நிரலிட்டு குறித்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் அந்த கோடுகளுக்குள் அடங்கும் விடயங்களை உள்ளடக்க வேண்டும். இதனைக் கவனமாக செய்ய வேண்டும். கோடுகளைப் பிரிக்கும் போது வளைவு, நெளிவுகள் இருத்தல் கூடாது.

மெருகூட்டல் அம்சத்தில் விரும்பியவாறு பக்கத்தில் பலவாறு உள்ளடக்கங்களை சேர்க்க முடியும். இது மிகவும் இலகுவானது. மிகவும் ஆக்கத்திறன் வாய்ந்தது. விரும்பியவாறு அழகூட்டி வடிவமைப்பை மேற்கொள்ளலாம்.

## சுவர் பத்திரிகை தயாரித்தல்

* சுவர் பத்திரிகையில் பிரசுரிப் பதற்கான தகவல்களை, செய்திகளை, ஓவியங்களை, காட்டூன்களை முன்கூட்டியே தயாராக வைத்திருங்கள்.
* சுவர் பத்திரிகையின் உள்ளடக்க விடயங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து தொகுப்பாசிரியர்கள் கலந்துரை யாடி முடிவு எடுக்க வேண்டும்.
* முதலில் பத்திரிகையின் மேற் பகுதியில் பெயர், பிரசுரிப்பு இலக்கம், வெளியீட்டாளர் யார் ஆகிய தகவல்களை ஆக்கபூர்வ மான முறையில் வரைந்து கொள்ளுங்கள்.
* 'போர்ட்' டின் சுற்றுப்பகுதியினை நிறக் கோடுகள் வரைபுகள் மூலம் அலங்கரிக்க முடியும்.
* இள நிற வார்னிஸ் கடதாசிகளின் மீது பிளட்டினம் பேனாக்களினால் எழுத முடியும். அவற்றை வெட்டி அல்லது கிழித்து தேவையானவாறு ஒட்டிக் கொள்ளலாம். எண்ணெய் கடதாசியிலும் அவ்வாறு எழுதி ஒட்டிக் கொள்ள முடியும்.
* எப்பொழுதும் மாணவ எழுத் தாளர்களின் பெயரையும் வகுப்பினையும் குறிப்பிடத் தவறாதீர்கள்.
* தொகுப்பாசிரியர்களை வேறாகக் குறிப்பிடுங்கள்.
* சுருக்கமான விடயங்களையும், ஆக்கங்களையும் பயன்படுத் துங்கள்.
* எழுத்துக்களை பெரிதாக எழுதுவது சிறந்தது.
* புகைப்படங்களை ஒட்டும்போது, பைன்டிங் ஒட்டுப்பசையினை பயன்படுத்துங்கள். தேவையான இடத்தில் ஒட்டுப்பசையினை இட்டு புகைப்படத்தினை அதன் மீது பொருத்துங்கள்.
* எழுத்துக்களை எழுதும் போது சாதாரண முறையில் எழுதுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...திரிகையின் அம்சங்கள்

...வகையில் சுருக்கமான பெயராக
...வேண்டும்.

...- வெளியீடு மாணவர் சங்கம்
அல்லது வகுப்பு

...டுத் திகதி சரியாகக் குறிப்பிடப்படல்
...ம். உதாரணத்திற்கு 2017 மே
... திகதி திங்கட்கிழமை என்றவாறு
...ல் வேண்டும்.

...ர்- தொகுப்பாளர்களின் பெயர்
மற்றும் வகுப்பு

...ரின் கருத்து- தொகுப்பாசிரியரின்
அல்லது தொகுப்
பாசிரியர்களின்
கருத்துக்கள் அடங்கிய
ஆக்கம்.

...ா செய்தி ஒன்று
...னப்படுத்தப்படல் வேண்டும்.

...றிய செய்திகள், ஆக்கங்கள்,
...த்திரங்கள், புகைப்படங்கள், குறுக்
...கெழுத்துப் போட்டிகள்,
கேள்வி-பதில் ஆகியவாறு பல்சுவை
விடயங்களை உள்ளடக்க முடியும்.

**இதழ்-** முதலாவது, இரண்டாவது என்று
குறிப்பிடப்படல் வேண்டும். இதழ் என்பது
ஒரு ஆண்டில் வெளியாகும் எத்தனையாம்
பத்திரிகை என்று அர்த்தமாகும்.

## ஆசிரியர் குழு

எழுத்தாற்றல் மிக்க மாணவர், மாணவிகளை ஆசிரியர் குழுவில் சேர்த்துக்கொள்ள முடியும். ஒருவரை பிரதம ஆசிரியராக நியமிக்கலாம். இதழுக்கு இதழ் ஆசிரியர்களை மாற்றுவதனால் ஆசிரியர் குழுவில் அனைவருக்கும் பிரதம ஆசிரியராக கடமையாற்றும் அனுபவம் கிட்டும்.

பலருக்கும் வாய்ப்பு அளிப்பதற்காக, பல ஆசிரியர் குழுக்களை நியமிக்க முடியும். நான்கு ஆசிரியர் குழுக்களை நியமித்தால் நான்கு வாரங்களுக்கான பத்திரிகைகளையும் ஆக்கும் பணியினை நான்கு ஆசிரியர் குழுவினருக்கு பிரித்து பொறுப்பளிக்க முடியும். இதனால் வாரத்திற்கு ஒரு தடவை சுவர் பத்திரிகையினை சிரமம் இன்றி உருவாக்க முடியும். ஆனால், இந்த நான்கு குழுவினரும் தலா ஒரு கிழமைக்கு ஒரே பெயரைக் கொண்ட சுவர் பத்திரிகையையே அமைக்க வேண்டும்.

## தேவையானவை


- பிரிசில் போர்ட் ஒன்று அல்லது இரண்டு
- பிளட்டினம் பேனா (எழுதக் கூடியதும், நிறந்தீட்டக் கூடியதும்)
- பல்நிற வார்னிஸ் பேப்பர்
- பைன்டிங் பசை
- கத்திரிக்கோல்
- நீளமான அடிமட்டம்
- பென்சில் மற்றும் அழிறப்பர்
- பல புகைப்படங்கள் மற்றும் சித்திரங்கள்
- வைட் போர்ட் பேனாக்கள்....
- வெண்ணிற அல்லது இள நிற எண்ணெய் கடதாசி

**பாவனை சொற்கள் சில...**

| | |
|---|---|
| Wall Paper | - சுவர் பத்திரிகை |
| Editing | - செப்பனிடல் |
| Page Layout | - பக்க வடிவமைப்பு |
| Team work | - குழுவாக செயற்படல் |
| Heading | - தலைப்பு |
| Sub Heading | - உப தலைப்பு |
| Illustrations | - வரைபடங்கள் |
| Poems | - கவிதைகள் |
| Short Stories | - சிறுகதைகள் |




# ...வாறு தயாரிப்பது...?



## பத்திரிகையை காட்சிப்படுத்தல்

காட்சிப்படுத்தக்கூடிய பொருத்தமான இடத்தினை தெரிவு செய்து கொள்ளுங்கள். வகுப்புசார் சுவர் பத்திரிகை எனின் வகுப்பறையில் காட்சிப்படுத்த முடியும். மாணவர் சங்க பத்திரிகையாயின் பாடசாலை முழுவதும் தென்படக் கூடிய இடத்தில் வைக்கலாம். பாடசாலையின் சுவர் பத்திரிகையாயின் பாடசாலைக்குள் பிர வேசிக்கும் பிரதான இடத்தில் வைக்க முடியும்.




## அனுமதி பெறல்

பாடசாலை ஆசிரியர்களின் வழிகாட்டுதலின் கீழ் சுவர் பத்திரிகை உருவாக்கப்படல் வேண்டும். சுவர் பத்திரிகையை ஆசிரியர்களிடம் காட்டி அனுமதி பெறல் அவசியமாகும்.

## சுவர் பத்திரிகையினால் கிடைக்கும் ஆற்றல்கள்

* எழுத்தாற்றல்
* திட்டமிடல்
* குழுவாகப் பணியாற்றல்
* பொறுமை
* கவனிப்பு ஆற்றல்
* வடிவமைப்புத் திறன்
* படைப்பாற்றல்
* நேர முகாமைத்துவம்
* சிந்தனை வளம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (பகுதி-II) (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: ..............................................

06) 3. பின்வரும் செயற்பாடுகளுக்கு சரியான +, -, x, ÷ குறியீடுகளை இடுக.

i. 5 ☐ 4 + 5 = 25    ii. 10 ☐ 2 - 8 = 0
iii. 12 ☐ 3 + 5 = 20    iv. 20 ☐ 4 ☐ = 12

07) சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

01. புனித வெள்ளரசு மரம் காணப்படும் நகரம் எது?

1. அனுராதபுரம்    2. பொலன்னறுவை
3. கம்பளை    4. கண்டி

02. உணவுச் சமிபாட்டைத் துரிதப்படுத்தும் போஷாக்குக் கூறு எது?

1. விற்றமின்    2. கனியுப்பு
3. நார்ப்பொருட்கள்    4. புரதம்

03. கறந்த பால் நன்கு காய்ச்சப்பட்டு போத்தலில் ஊற்றி வைக்கப்பட்டுள்ளது. சில மணித்தியாலங்களின் பின் பால் கெட்டுப்போயிருந்தது. அதற்கான காரணம் யாது?

1. பாலைக் காய்ச்சி ஊற்றியதால்
2. பாலிற்கு சீனி சேர்த்தமையால்
3. பாலுடன் நீர் கலந்தமையால்
4. போத்தலில் வளி அகற்றப்படாமையால்

04. இலங்கையில் வறியவர்களுக்காக வழங்கும் உதவித் திட்டம் யாது?

1. ஜனசவிய திட்டம்    2. வீடமைப்புத் திட்டம்
3. உதவித் திட்டம்    4. சமுர்த்தி திட்டம்

05. சந்திர கிரகணம் ஏற்படும் நாளாக அமைவது எது?

1. பௌர்ணமி தினம்    2. அமாவாசை தினம்
3. அட்டமி தினம்    4. கூற முடியாது

06. சிறுவர்கள் பாடசாலை செல்லாது வேலைக்குச் செல்லல் தொடர்பாக நீர் கூறும் கருத்து;

1. சிறுவர் உரிமை மீறலாகும்
2. அதிக பணம் கிடைக்கும்
3. அம்மா, அப்பாவிற்கு உதவலாம்
4. சிறு வயதில் இருந்து பணம் சேமிக்கலாம்

07. பின்வரும் தாவரங்களில் பூக்காத தாவரம் எது?

1. தென்னை    2. மடுப்பனை
3. முள்முருங்கை    4. பனை

08. இலங்கையில் தேசிய தாவரவியல் பூங்கா அமைந்துள்ள இடம் எது?

1. பேராதனை    2. கண்டி
3. கம்பளை    4. கொழும்பு

09. தாவரத்தில் சுவாசம் நடைபெறும் பகுதி எது?

1. பூ    2. காய்    3. இதழ்    4. இலை




10. முளைதிறனுடைய வித்தை நீருள்ள பாத்திரத்தினுள் இட்டு சில நாட்களில் அவதானித்தபோது வித்து முளைக்கவில்லை. இதற்கான காரணம்;

1. வளியில்லாமை    2. வெப்பமின்மை
3. அதிக நீர்    4. அதிக ஈரப்பதன்

11. வாழ்நாளில் ஒரே ஒரு தடவை மட்டும் பூக்கும் தாவரம்;

1. பனை    2. மரமுந்திரிகை
3. பூவரசு    4. வாழை

12. பின்வருவனவற்றுள் ஏறுகொடித் தாவரம் எது?

1. வெற்றிலை    2. பூசணி
3. வல்லாரை    4. வற்றாளை

13. துலாக் கிணறு அதிகம் பயன்படுத்தும் பிரதேசம்;

1. களுத்துறை    2. காலி
3. அனுராதபுரம்    4. யாழ்ப்பாணம்

14. உணவு சமைப்பதற்கு பயன்படுத்தப்படும் பாத்திரங்களில் சிறந்தது;

1. வெள்ளிப் பாத்திரம்    2. அலுமினியப் பாத்திரம்
3. மட்பாண்டம்    4. சில்வர் பாத்திரம்

15. இலங்கையில் மிகப் பெரிய மலை எது?

1. நக்கிள்ஸ் மலை    2. நமுனுகுல மலை
3. சிவனொளிபாதமலை    4. பீதுருதாலகால மலை

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

## (பகுதி-II)

**(ஜூன் 14 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)**

*01)* 1. தந்தையும் மகனும்
2. கதிரவனின் உலா, பசுமையான காடுகள், நீர்வீழ்ச்சிகள்
3. கட்டடங்கள்
4. சிறு சிறு
5. சிறு சிறு பெட்டி, வெண் பனி
6. 1. சூரியன்    2. வனங்கள், வனாந்தரங்கள்
7. ★ சென்றது    ★ காணப்பட்டது

*02)* 1. பரிசளிப்பு    2. முயற்சி

*03)* 1. நாள்தோறும்    2. வஞ்சகமற்ற தன்மை

*04)* 1. தயவுசெய்து நான் சொல்வதைக் கவனியுங்கள்
2. நான் சிற்றுண்டிச்சாலைக்கு செல்லலாமா?

*05)* 1. உங்களுக்கு என்ன வேண்டும்?    2. கதை எழுதுங்கள்

*06)* 1. i. ரூபா 8.50    ii. ரூபா 180.00
iii. ரூபா 63.75    iv. ரூபா 340.00
2. i. $\frac{3}{6}$    ii. 0.5    iii. 24 $cm^2$
iv. 20 $cm^2$    v. 12 $cm^2$

Digitized by Noolaham Foundation



# இலங்கையில் தொடரும் இயற்கை அனர்த்தங்கள்

**கொழும்பு பல்கலைக்கழகத்தின் பூகற்பவியல் பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் டி. எம். கருணாதாச**

இலங்கையின் பூகோள அமைப்பானது, அனர்த்தங்கள் அற்றது என்றே வரலாற்று ரீதியாகக் கருதப்பட்டு வந்தது. எனினும் இந்த கருத்து தற்போது மாறி உள்ளது என்பதனை அனைவராலும் அறிந்து கொள்ள முடிகின்றது.

“2004ஆம் ஆண்டு சுனாமியின் பின்னர் இந்த நம்பிக்கைகளில் பாரியளவிலான மாற்றங்கள் ஏற்பட்டன. எதிர்வரும் காலங்களில் உலகளாவிய மாற்றங்களின் அடிப்படையில் இலங்கை ‘உறங்கா நிலை’ எரிமலைகளைக் கொண்ட பிராந்தியத்திற்குள் பிரவேசிக்கும் நிலையும் ஏற்படலாம்'' என கொழும்பு பல்கலைக்கழக பூகற்பவியல் பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் டி.எம்.கருணாதாச தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ள விபரங்கள் வருமாறு;

''இயற்கை அனர்த்தம் என்பது எங்கும் எப்பொழுதும் ஏற்படலாம். அந்த வகையில் தற்போது நாம் அதிக மழையினால் சிரமங்களை எதிர்கொண்டிருக்கின்றோம். இதன் விளைவாக மண்சரிவும், வெள்ளப் பெருக்கும் மக்களை பெருமளவில் பாதித்துள்ளது. குறுகிய காலப்பகுதியில் கன மழை அதிகமாக பொழியுமாயின், மண்சரிவு அபாயத்தினை அது ஏற்படுத்திவிடும்.

48 மணித்தியாலத்தில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி கிடைத்தால் வெள்ளப் பெருக்கு அபாயம் ஏற்படலாம் என்று அனுமானிக்க முடியும்.

பருவப் பெயர்ச்சி மழைக் காலத்தில் மாலை 2 முதல் 3 மணி வரை மழை பெய்வது புதிய விடயமல்ல. எனினும், இதன்போது இவ்வாறான பாரிய அழிவுகள் நடைபெறுவது அபூர்வமாகவே நடைபெற்றுள்ளது.

எனினும், இம்முறை பருவப் பெயர்ச்சி மழையினால் ஏற்பட்ட மண்சரிவும், வெள்ளமும் மக்களின் உயிரையும், சொத்துக்களையும் சூறையாடியுள்ளது. சரிவு நிலங்களில் மனித குடியிருப்புக்கள் அதிகரித்துள்ளமையையும், பலவிதமான அபிவிருத்திப் பணிகளுக்கு மண் அகழ்வுகள், மரம் தறித்தல் நடைபெற்றுள்ளதையும் காணக் கூடியதாக உள்ளது. இவையும் மண் சரிவிற்கு காரணியாக அமைந்துள்ளன.

அத்துடன், பொருத்தமற்ற இடங்களில் மனிதர்கள் மேற்கொள்ளும் பாரிய ளவிலான கட்டிட நிர்மாணப் பணிகளும் இன்று பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. எனவே, இவற்றைத் தடுப்பது தொடர்பில் மக்கள் மற்றும் நிர்வாகத் துறையினரின் ஒத்துழைப்புகள் மிகவும் அவசியமாகின்றது''




விஜய் + தூவானம்

**இணைந்து வழங்கும்**

**பரிசுப் போட்டி**

பிரதி புதன்தோறும் Thoovaanam SMS ஊடாக கேட்கப்படும் பொது அறிவுக் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலிட்டு ரூபா. 8,000 பெறுமதியான 3 பரிசில்களையும் பெற்றிடுங்கள்.

வாராந்தம் இவ் 3 பரிசில்களையும் வெல்வதற்கான கேள்வியினை அறிந்து கொள்ள → அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் Thoovaanam SMS இனை செயற்படுத்திக்கொள்ளுங்கள்

**Thoovaanam SMS**
**செயற்படுத்தும் முறை**

F Thoovaanam

என Type செய்து
40404 எனும்
இலக்கத்திற்கு
SMS செய்யவும்
(இச்சேவை முற்றிலும் இலவசம்)

இவ்வார கூப்பன் - 21.06.2017
விடை : ..............................
பெயர் : ..............................
முகவரி : ......................
தொ.பே.இல: ..........................
பாடசாலை : ........................
..................................
கையொப்பம்

**அனுப்ப வேண்டிய முகவரி :**

3 பரிசில்கள்
21.06.2017
விஜய்
த.பெ.இல: 2037
கொழும்பு

3 பரிசில்கள் போட்டி - 07.06.2017
விடை: 1870 ஆம் ஆண்டு
வெற்றியாளர்:
யூ.உமைமா,
28, லிங்கநகர்,
திருகோணமலை.

Gift sponsored by:
www.srijob.com














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்துகொள்வோம்

'மொசாட்', 'ரோ' என்பன எந்த நாட்டின் இரகசியப் புலனாய்வு அமைப்புக்களாகும்?
மொசாட் - இஸ்ரேல்
ரோ - இந்தியா



இளம் வயதில் 15 டெஸ்ட் போட்டிகளில் 1000 ஓட்டங்களைப் பெற்று சாதனை படைத்துள்ள இலங்கை வீரர் யார்?
குசல் மெண்டிஸ்



இலங்கையின் 45 ஆவது பிரதம நீதியரசராக நியமனம் பெற்றுள்ளவர் யார்?
பிரியசத் டீப்



89 ஆவது ஓஸ்கர் பட விழாவில் சிறந்த படமாக தெரிவுசெய்யப்பட்ட படம் எது?
மூன் லைட்



2017 ஆம் ஆண்டில் ஐக்கியநாடுகள் சபையின் அமைதித் தூதுவராக நியமனம் பெற்றவர் யார்?
மலாலா யூசுப்

தொகுப்பு: உருவை பரந்தாமன்

# ஏன்? எப்படி?

**கேள்வி:** ஒருவர் நின்று கொண்டு உணவருந்தினாலும், தலைகீழாக இருந்து கொண்டு உணவருந்தினாலும் உணவு வயிற்றுக்குள் செல்கின்றது. அது எவ்வாறு?



பதில்: நாம் வாய் மூலம் உள்ளெடுக்கும் உணவினை விழுங்கும் போது, அந்த உணவு தொண்டைக்குழாய்க்கு செல்கின்றது. இதன் சுவற்றில் உள்ள தசைகள் ஓர் ஒழுங்குமுறையில் இயங்குகின்றன. இதனால் முதலில் தொண்டைக் குழாய் சுவர்கள் நெகிழ்ந்து உள்நோக்கி உணவினை தள்ளுகின்றன. இது பற்பசை டியூப்பிலிருந்து பற்பசை வெளியேறும் விதத்தினை போன்றதாகும். தசைகளின் செயற்பாடு காரணமாக இங்கு ஈர்ப்பு விசை பயன்படுவதில்லை. இதனால் நின்று கொண்டு உணவருந்தினாலும், தலைகீழாக இருந்து உணவருந்தினாலும் அது வயிற்றுக்கு செல்கின்றது. மாறாக வாயின் வழியே வெளியேறுவதில்லை.

# மண் வளத்தினைக் காப்பது எப்படி?



- சுற்றுச் சூழலில் கழிவுகள் உருவாதலை கட்டுப்படுத்துங்கள்.
- மீள் பயன்பாட்டு பொருட்களைக் கொள்வனவு செய்யுங்கள். உதாரணமாக, பிளாஸ்டிக்கு களுக்குப் பதிலாக கண்ணாடிப் பொருட்களைப் பயன் படுத்துங்கள்.




- பிளாஸ்டிக் பைகளுக்குப் பதிலாக துணிப்பைகளைப் பயன்படுத்துங்கள். பொருட்களைப் பயன்படுத்துங்கள்.
- புதிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதில் பழைய பொருட்களை திருத்திப் பயன்படுத்துங்கள்.
- பொலித்தீன்களினால் சுற்றப்பட்டுள்ள பொருட்களை வாங்குவதனைத் தவிருங்கள். நாம் கழிவாக அகற்றும் பொருட்களில் 33 சதவீதமானவை பொருட்கள் சுற்றப்படும் தாள்களும், பிளாஸ்டிக்குகளுமாகும்.
- அடிக்கடி சார்ஜ் செய்யக் கூடிய பற்றரிகளைப் பயன் படுத்துங்கள்.
- பிரதி எடுக்கும் போதும் அச்சடிக்கும் போதும் கடதாசியின் இரு பகுதிகளையும் பயன்படுத்துங்கள்.
- கடித உறைகள், ஃபோல்டர் மற்றும் ஃபைல்கள், தாள்களை இணைக்கும் கருவிகள் என்பனவற்றை மீண்டும் மீண்டும் பயன்படுத்துங்கள்.
- தொடர்பாடலை காகிதங்களில் இன்றி ஈமெயிலில் மேற் கொள்ளுங்கள். அத்தோடு, கடதாசி களை மீளப் பயன்படுத்துங்கள்.




Digitized by Noolaham Foundation












பனி மனிதன்


புலி, சிறுத்தை முகங்கள்


சூரியன்


வான்கோழி


முகமூடி


பூ

# 'பேப்பர் ப்ளேட்' கைவினைப் பொருட்கள்


பெண்குயின்


நரி


சிறுமி



ஆந்தை

- நுஸ்ஜீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**01.** இவ்விரண்டிலும் அதிகளவு பொருட்களைக் கொண்டு செல்லக்கூடிய வாகனத்தில் '✓' அடையாளமிட்டுக் காட்டுக.




**02.** நீல நிறத்தில் காணப்படும் வாகனம் எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?

..........................

**03.** இரண்டு வாகனங்களும் நான்கு .................................... கொண்டுள்ளன.

(சக்கரங்களை/ கண்ணாடிகளை)

எனது பெயர் ரோஷன்.
எனக்கு விருப்பமான பாடங்கள் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் சுற்றாடல். சிறு வயதிலிருந்தே நன்றாகக் கல்வி கற்று பிற்காலத்தில் சிறந்த பொறியியலாளராக வரவேண்டும் என்பதே எனது விருப்பம். விடுமுறை தினங்களில் நான் சுற்றாடல் பாதுகாப்பு செயற்பாடுகளில் ஈடுபடுவேன்.



**01.** ரோஷன் பிற்காலத்தில் எப்படிப்பட்டவராக வர விரும்புகின்றான்?

........................................................

**02.** விடுமுறை தினங்களில் எத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றான்?

........................................................

**03.** பிற்காலத்தில் சிறந்த ஒரு நபராக வேண்டுமானால் சிறு வயதிலிருந்தே நாம் என்ன செய்ய வேண்டும்?

........................................................

**04.** ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சுற்றாடல் என்பன ரோஷனுக்கு விருப்பமான பாடங்கள். அவ்வாறே, உங்களுக்கு விருப்பமான பாடங்கள் யாவை?

........................................................

★ மேடை நாடகங்கள் அரங்கேற்றப்படும் இடம்: ....................


★ இங்கு வளர்ப்பு விலங்குகளைக் காணலாம்: ......................................

★ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள் இங்கு காட்சிக்கு வைக்கப் பட்டிருக்கும்: ......................................

★ கல்வி கற்றுக்கொடுக்கப்படும் இடம்: ......................................

★ குற்றச் செயல்கள் குறித்த முறைப்பாடு களையும் இங்கு மேற்கொள்ளலாம்: ............................

★ நீச்சலடிப்பதற்காக அமைக்கப்படுவது: ......................................


பண்ணை


பாடசாலை


நீச்சல் தடாகம்



அரங்கம்



அருங்காட்சியகம்



பொலிஸ் நிலையம்




**01.** இங்கு விற்பனைக்கு இருப்பவை யாவை?
1. புதிய பழங்கள்
2. செந்நிறக் காய்கறிகள்
3. புதிய காய்கறிகள்

**02.** ஒவ்வொன்றிலும் 500 கிராமின் விலையே இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளதெனின், ஒரு கிலோ பீட்ருட் வாங்க எவ்வளவு பணம் தேவை?

..............................

**03.** மிகக் குறைந்த விலைக்கு வாங்கக்கூடியது எது?


..............................

**04.** 500 கிராம் கெரட்டும் 250 கிராம் சேர்ஸும் வாங்க எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?

..............................

-ஜீநா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









## எதிர்ப்பதம் தருக






## அடுத்து வர வேண்டியவை எவை?



## A படத்தை அவதானித்து B படத்திலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக




## குறுக்கெழுத்துப் போட்டி: 245



### மேலிருந்து கீழ்

1. காகம் கரையும் என்பதுபோல மயில்.
2. எரித்தல்.
3. '............... இல்லாப் பண்டம் குப்பையிலே' என்பது பழமொழியாகும். (குழம்பியுள்ளது)
4. பிடிவாதம்.
5. நடு.
6. அழகு. (தலைகீழ்)


### இடமிருந்து வலம்

1. ஏதேனுமொரு நிகழ்வுக்கு அழைப்பு விடுக்கும் இதழ்.
3. சொந்தம். (மாறியுள்ளது)
4. ஒரு நோய்.
6. யானை. (குழம்பியுள்ளது)

## அறிவுக்கு விருந்து (07.06.2017) விடைகள்

* மா, மாடு, மாலை, மாதம், மான், மாவடு, அம்மா, அதன், அவன், அவலை, அலை, தன், தம், தடு, தலை, காடு, காலை, வடு, வலை








Digitized by Noolaham Foundation.



அக்கரைப்பற்று இலக்கம் 8 இனைச் சேர்ந்த கருணாநிதி-கார்த்திகா தம்பதியரின் செல்வப் புதல்வன் டேவவர்சன், தனது முதலாவது பிறந்தநாளை 10.06.2017 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.





அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டிகளில் பதுளை பசறை தமிழ் தேசிய பாடசாலை சார்பில் பங்குபற்றி வலய, மாகாண மட்டங்களில் வெற்றியீட்டிய மற்றும் தேசிய மட்டத்திற்கு தெரிவான மாணவர்களும் பங்களிப்புச் செய்த ஆசிரியர்களும் பாடசாலை அதிபர் சித்தார்த்தன் அவர்களுடன் காணப்படுகின்றனர். இம்மாணவர்கள் குழுநடனம் மற்றும் வில்லுப்பாட்டுப் போட்டிகளில் தேசிய மட்ட தமிழ் மொழித் தினப் போட்டிக்கு தெரிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(தகவல்: ந.மலர்வேந்தன்- நமுனுகுல)

விஜய் விழா உலா
த.பெ.எண் 2037
கொழும்பு



ஆரையம்பதி கிராமக் கோட் வீதியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை-பத்மினி தம்பதியரின் தவப்புதல்வி சதுர்ஷா, தனது எட்டாவது பிறந்தநாளை 17.06.2017 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

## கைவண்ணங்கள்






எஃப்.நிஸ்ரா நிஸார்,
பண்ணவ முஸ்லிம் மத்திய கல்லூரி,
பண்ணவ.



எஃப்.இல்மா
வியாங்கல்லை முஸ்லிம் மகா வித்தியாலயம்,
வியாங்கல்லை.


அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு



ஜி.பிரசன்னா,
அடம்பன் மத்திய மகா வித்தியாலயம்,
வேட்டையன் முறிப்பு,
மன்னார்.



எம்.யுஸ்ரி,
நாங்குறுகம முஸ்லிம் வித்தியாலயம்,
மாவனல்லை.



ஆர்.இந்துஜா,
பரி.யோவான் தமிழ் கல்லூரி,
இறக்குவானை.



# ஆவிகள், அமானுஷ்யங்கள் உலகில் உள்ளனவா...?

## ஒரு சுவாரஸ்யமான ஆய்வு

உலகளாவிய ரீதியில் ஆவிகள், அமானுஷ்யங்கள் தொடர்பான நம்பிக்கைகள் காணப்பட்டாலும், ஆபிரிக்க நாடுகளிலேயே இது தொடர்பான நம்பிக்கைகள் தீவிரமாக உள்ளது.

இந்த ஆவிகள் தொடர்பில் வாதப் பிரதி வாதங்களும் இருக்கவே செய்கின்றன. அந்தவகையில், ஆவிகளைத் தாம் கண்டதாகவும் திகில் நிறைந்த அவற்றின் நடமாட்டத்தை அவதானித்ததாகவும், மேலும் ஆவிகளால் பீடிக்கப்பட்டவர்கள் என சில மாறுபட்ட நடத்தை உடையவர்களையும் கண்டதாகவும் இதற்கு உதாரணமாகக் சிலர் கூறுகின்றனர். எனினும், இவை மனநலப்பிரச்சினைகள் மற்றும் மனதில் எழும் மனப் பிரம்மைகள் என ஆய்வாளர்களால் காரணம் கூறப்பட்டது.

ஆனால், ஆவிகள் தொடர்பான கருத்துக்களுக்கு மேலும் வலுச் சேர்க்கும் முகமாக, நிஜமான புகைப்பட ஆதாரங்கள் வெளியிடப்பட்டன. இத்தகைய புகைப்படங்களில் காணப்பட்ட மர்மமான புகைபோன்ற உருவங்கள் ஆய்வாளர்களையே திகைப்படையச் செய்தன. எனினும், இது தொடர்பிலும் ஆய்வுகள் நடத்தப்பட்டன. அந்தவகையில், ஒருவர் நீண்ட நேரம் இருக்கையில் அமர்ந்தபின் எழுந்து செல்லும்போது, அந்த நபரில் இருந்து எழும் மின்கதிர் அலைகள் இருக்கையில் படிவதாக கண்டறியப்பட்டது. இக்கதிர் ஒவ்வொரு தனி நபரில் இருந்தும் வெளிப்படுகின்றது. ஒரு நபர் திடீரென இறக்கும்போது, அவர் வசித்த இடத்தில் அவரிடம் இருந்து எழுந்த மின்கதிர்கள் விட்டுச் செல்லப்படுகின்றன. இவை நீண்டகாலம் அவர் தங்கியிருந்த இடத்தில் காணப்படும். இதனை Infrared Photography முறையில் புகைப்படங்களை எடுக்கும்போது சிலவேளைகளில் இக்கதிர்கள் மனித உருவில் புகை போன்று காணப்படும்.

இதனையே, ஆவிகள் நடமாடுவதாக சிலர் கருதுகின்றனர் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆனால், ஆவிகள் தொடர்பில் நம்பிக்கை கொண்டவர்கள் இதனை நம்ப மறுக்கின்றனர். அதேவேளை, ஆவிகள் இருப்பது தொடர்பில் உறுதியான ஆதாரங்களையும் அவர்களால் முன்வைக்கவும் முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று மாத கால டெங்கு ஒழிப்புத் திட்டம்



மூன்று மாதங்களுக்கான தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஜூன் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. டெங்கு ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியும் சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சும் இணைந்து இந்த வேலைத்திட்டத்தினை அமுல்படுத்தியுள்ளது.

இந்த மூன்று மாத கால வேலைத்திட்டத்திற்கமைய, ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமையன்று அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தமது சுற்றாடலை சுத்தம் செய்ய வேண்டும். பாடசாலை சுற்றாடலை சுத்தம் செய்யும் பணியினை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து மேற்கொள்வது அவசியம். வாரத்திற்கு ஒரு தடவை வீட்டுச் சுற்றாடல் சுத்தம் செய்யப்படல் வேண்டும். இதன்போது டெங்கு நுளம்புகள் பெருகும் இடம் குறித்து கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்படாத 7 மாகாணங்களில் இந்த டெங்கு ஒழிப்புத் திட்டம் முதலில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

# யாழில் 33,000 குடும்பங்கள் வறட்சியினால் பாதிப்பு

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலை காரணமாக 33,000 குடும்பங்கள் குடிநீர் மற்றும் இதர அத்தியாவசிய தேவைகளுக்கு போதியளவு நீர் இன்றிப் பெரும் அவதியுற்று வருவதாக யாழ். மாவட்ட செயலாளர் நாகலிங்கம் வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்குற்பட்ட ஊர்காவற்றுறை, மருதன்கேணி, காரைநகர், சண்டிலிப்பாய், சங்கானை, வேலணை ஆகிய பகுதிகளே வறட்சியினால் பெரும் பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளன. பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான உதவிகளை யாழ். மாவட்ட செயலாளர் அலுவலகத்தினூடாக, வழங்குவதற்கு இடர் முகாமைத்துவ அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

புங்குடுதீவு மற்றும் மண்டைதீவு ஆகிய பகுதிகளிலுள்ள நீர்நிலைகள் யாவும் வற்றிப்போயுள்ளதால், அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமக்குத் தேவையான குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்காக தினமும் வீதிகளில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.




உங்கள் அபிமான

தமிழ் Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

விலை Rs. 10/=

தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது

wijeyanewspapers helping shape opinion · The Sunday Times · விஜய் · DailyMirror · தமிழ் Mirror www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

දුව: අම්මේ! ගංවතුරෙන් අනාථ වෙච්ච අයට අපේ පාසලෙන් ආධාර දෙනවා.
அம்மே! கங்வத்துரென் அநாத்த வெச்ச அயட்ட அப்பே பாசலென் ஆதார தெனவா.
மகள்: **அம்மா! வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு எமது பாடசாலையினால் உதவிகள் வழங்குகிறார்கள்.**

අම්මා: ඒක නම් හොඳම වැඩක් දුව.
ஏக்க நம் ஹொந்தம வெடக் துவ.
அம்மா: **அதுவென்றால் நல்லதொரு வேலை மகள்.**

දුව: ඔව් අම්මේ. ඒ අය හරි පවු නේද?
ஒவ் அம்மே. ஏ அய ஹரி பவு நேத?
மகள்: **ஆம் அம்மா. அவர்கள் சரியான பாவம் தானே?**

අම්මා: ඔව් දුව. මොනවද ගේන්න කිව්වේ?
ஒவ் துவ. மொனவத கேன்ன கிவ்வே?
அம்மா: **ஆம் மகள். என்ன கொண்டுவரச் சொன்னார்கள்?**

දුව: පාසල් ළමයින්ට අවශ්‍ය දේවල් තමා ගේන්න කිව්වේ.
பாசல் லமய்ன்ட்ட அவஷ்ய தேவல் தமா கேன்ன கிவ்வே.
மகள்: **பாடசாலை பிள்ளைகளுக்குத் தேவையான பொருட்கள்தான் கொண்டுவரச் சொன்னார்கள்.**

: පොත්, පෑන්, පැන්සල්, සපත්තු ඒ වගේ දේවල්.
பொத், பேன், பென்சல், சபத்து ஏ வகே தேவல்.
: **புத்தகங்கள், பேனாக்கள், பென்சில்கள், சப்பாத்து போன்றவை.**

අම්මා: දුව මොනවද ගෙනියන්නේ?
துவ மொனவத கெனியன்னே?
அம்மா: **மகள் என்ன கொண்டுபோவீர்கள்?**

දුව: අපේ පන්තියේ ළමයින්ට ගේන්න කිව්වේ පොත්.
அப்பே பந்தியே லமய்ன்ட்ட கேன்ன கிவ்வே பொத்.
மகள்: **எமது வகுப்பு பிள்ளைகளை புத்தகங்கள் கொண்டு வரச் சொன்னார்கள்.**

අම්මා: එහෙනම් දුව, පොත් දුසිමක් ගිහින් දෙන්නකෝ.
எஹெனம் துவ,
பொத் துசிமக்
கிஹின் தென்னகோ.
அம்மா: **அப்படியென்றால் மகள், ஒரு டசின் புத்தகம் கொண்டுபோய் கொடுங்கள்.**

දුව: හොඳයි අම්මේ.
ஹொந்தய் அம்மே.
மகள்: **நல்லது அம்மா.**



**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. පාසලෙන් ............ දෙනවා.
2. හොඳම වැඩක් ..........
3. ............ ගේන්න කිව්වේ?
4. ........................ පැන්සල්.




**'Am' எனும் நிகழ்கால துணை வினைச்சொல் வினா வாக்கியத்தில் கையாளப்படும் முறை**

அ) I am in the class now.
நான் இப்பொழுது வகுப்பில் இருக்கிறேன்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

**குறிப்பு:** மேற்படி 'உடன்பாடு' நிலை வாக்கியத்தில் காணப்படுகின்ற, 'am' எனும் துணை வினைச்சொல், அவ்வாக்கியத்தின் முன்னிலையில் இடம்பெறுகின்றபோது, அவ்வாக்கியம் 'வினா' வாக்கியமாகப் பின்வருமாறு மாற்றமடைகின்றது.

ஆ) Am I in the class now?
நான் இப்போது வகுப்பில் இருக்கிறேனா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

★ **இவ்வாறே ஏனைய வாக்கியங்களையும் அவதானிப்போம்.**

இ) I am a doctor.
நான் ஒரு மருத்துவர்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

ஈ) Am I a doctor?
நான் ஒரு மருத்துவரா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

**குறிப்பு:** மேற்படி (இ) உடன்பாடு வாக்கியத்திலும், (ஈ) வினா வாக்கியத்திலும் இடம்பெற்றுள்ள 'am' எனும் ஆங்கில வினைச் சொல்லுக்கு, தமிழில் தனியான அர்த்தம் பெறப்படுவதில்லை. இங்கே இந்தச் சந்தர்ப்பத்தில், வினைச்சொல்லானது, தமிழ் இலக்கண மரபின்படி 'தோன்றா வினை' என்றே கொள்ளப்படுகிறது.

★ 'ing' சேர்ந்த வினைச்சொல்லுடன், 'am' எனும் துணை வினைச்சொல் கையாளப்பட்டு அமைக்கப்பட்ட வாக்கியங்கள் வருமாறு;

அ) I am eating bread.
நான் பாண் சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறேன்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

ஆ) Am I eating bread?
நான் பாண் சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறேனா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

★ I am eating.
நான் சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறேன்.

★ Am I eating?
நான் சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறேனா?
(நான் சாப்பிட்டுக்கொண்டா இருக்கிறேன்?)

★—★—★—★

இ) I am looking at the road.
நான் தெருவைப் பார்த்துக்கொண்டு இருக்கிறேன்.

ஈ) Am I looking at the road?
நான் தெருவைப் பார்த்துக்கொண்டு இருக்கிறேனா? (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளிக்கு விருது




இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் சர்வதேச கிரிக்கெட் சபையினால் 'ஹோல் ஒஃப் பேம்' விருது வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளார்.

செம்பியன்ஸ் கிண்ண லீக் போட்டியில் இலங்கை-இந்திய அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டி இடை வேளையின் போதே, மேற்படி விருது உத்தியோகபூர்வமாக முரளிதரனிடம் கையளிக்கப்பட்டது.

800 டெஸ்ட் விக்கெட்கள் மற்றும் 534 சர்வதேச ஒருநாள் விக்கெட்கள் என அதிக விக்கெட்களைப் பெற்றவர் என்ற பெருமையை இலங்கைக்கு முரளிதரன் ஈட்டிக் கொடுத்துள்ளமையை கௌரவிக்கு முகமாகவே அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

விஜய் ஸ்போர்ட்ஸ்

# காலபந்தாட்ட வீரர் மரணம்

ஐவரி கோஸ்ட் தேசிய கால்பந்தாட்ட அணியின் வீரரான சிக் டிலுட்டே பயிற்சிப் போட்டியொன்றில் ஈடுபட்டிருந்த போது உயிரிழந்துள்ளார். கால் இடறி கீழே வீழ்ந்ததன் காரணமாகவே, அவர் உயிரிழந்துள்ளார். இவர் இங்கிலாந்து பிரீமியர் லீக் போட்டிகளில் 'நிவ்காஸல்' அணியின் சார்பாக விளையாடி



வந்ததுடன், சீன பிராந்திய அணியுடன் இந்த வருடம் தொடக்கம் விளையாட ஒப்பந்தமாகியிருந்த நிலையிலேயே, மேற்படி பயிற்சிப் போட்டியின்போது, உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# அதிக பணம் ஈட்டும் ரொனால்டோ



உலகிலேயே அதிக பண வருவாயை ஈட்டும் விளையாட்டு வீரர் என்ற சிறப்பை போர்த்துக்கல் நாட்டின் கால்பந்து அணியின் தலைவர் ரோனால்டோ பெற்றுள்ளார். 'ஃபோபெஸ்' என்ற சஞ்சிகை மேற்கொண்ட ஆய்வின்போதே, இது தெரிய வந்துள்ளது. ரியல் மெட்ரிட் அணியின் முன்வரிசை வீரராகிய ரோனால்டோ கடந்த வருடம் 'யூரோ' கிண்ணத்தை வெற்றியீட்டியதுடன், அதன்மூலம் 93 மில்லியன் அமெரிக்க டொலர் பண வருவாயை ஈட்டியமையும் குறிப்பிடத்தக்கது.

# ரியல் மெட்ரிட் அணியின் வெற்றி




இந்த வருடத்திற்கான கால்பந்தாட்ட செம்பியன்ஸ் லீக் 2017 கிண்ணத்தை ஸ்பெயின் நாட்டின் ரியல் மெட்ரிட் அணி வெற்றிகொண்டுள்ளது.
இந்த அணி இங்கிலாந்தை வெல்வது இது 12 ஆவது தடவையாகும். இதன்படி செம்பியன் கிண்ணத்தை அதிக தடவைகள் வெற்றியீட்டிய அணி என்ற பெருமையையும் இந்த அணியே பெறுகின்றது.

'ஜூவெண்டஸ்' அணியை 4-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தே 'ரியல் மெட்ரிட்' அணி செம்பியன்ஸ் கிண்ணத்தை சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது.

# 'போல்ட்' ஜெமெய்காவில் ஓய்வு






உலகின் வேகமான ஓட்டவீரரான உசேன் போல்ட் ஜெமெய்காவில் நடைபெற்ற போட்டி ஒன்றில் பங்குபற்றிய பின்னர் தமது உள்ளூர் போட்டிகளுக்கான ஓய்வை அறிவித்துவிட்டார். தமது தாய்நாட்டில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற போட்டியொன்றில் இறுதி யாகக் கலந்துகொண்ட போல்ட் மேற்படி போட்டியில் வெற்றிபெற்றதையடுத்து ஓடு தளத்தை முத்தமிட்டவாறு ரசிகர்களுக்கு கையசைத்து பிரியாவிடை பெற்றார்.

இந்த வருடம் ஒகஸ்ட் மாதம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள உலக மெய்வல்லுனர் போட்டியின் பின்னர் உலக மெய்வல்லுனர் போட்டிகளிலிருந்தும் போல்ட் ஓய்வுபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பூச்சியினங்கள்

**பூச்சியினங்களில் பெரும்பாலானவை மனிதர்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்துவதில்லை. சில பூச்சிகள் பயன் மிக்கவை. இன்னும் சில பூச்சியினங்களின் கழிவுகள் மறுசுழற்சிக்கு உதவுகின்றன. ஆனால், மனிதர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய பூச்சிகளும் இருக்கத்தான் செய்கின்றன. அவ்வாறான பூச்சியினங்கள் பற்றி அறிந்துகொள்வோம்.**





## தேனீ, குளவி மற்றும் காட்டுக் குளவி

இவை பண்டைய காலம் முதல் மனிதர்களுக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தி வரும் பூச்சி இனங்களாகும். தேனீயைவிட குளவியும், குளவியைவிட காட்டுக் குளவியும் விஷத் தன்மை வாய்ந்தவை. தேனீயைவிட குளவி ஏழு மடங்கு விஷத் தன்மை வாய்ந்தது. குளவியினைவிட காட்டுக் குளவி ஏழு மடங்கு விஷத் தன்மை வாய்ந்தது என்று கிராமங்களில் வசிக்கும் மக்கள் மத்தியில் பரவலான கருத்து நிலவுகின்றது.



### தேனீ

'ஏபிஸ்' (Apis) மற்றும் 'ட்ரிகொனா' (Trigona) ஆகிய தேனீ இனங்கள் தேன் கூடுகளை உருவாக்கும். இவை தமது பாதுகாப்புக்காக கொடுக்குகளைப் பயன்படுத்துகின்றன. வயிற்றின் முனையில் இருக்கும் கொடுக்கின்மூலம் பிற உயிரிகளைக் கொட்டுகின்றன. தேனீ கொட்டிய இடத்தில் அதன் கொடுக்கு ஒட்டியிருப்பதைக் காணலாம். தேனீ கொட்டினால் பலவிதமான உடல் உபாதைகளும் ஒவ்வாமையும்



### குளவி

இலங்கையில் காணக்கூடிய விஷத் தன்மை வாய்ந்த ஹைமனொப்டெரா வகையைச் சேர்ந்த ஓர் பூச்சியினமே குளவி ஆகும். 'எபிடே' (Apidae) பிரிவினைச் சேர்ந்த இவை, காட்டுக் குளவிகளைவிட, அளவில் சற்று சிறிதாக இருக்கும். முகத்தில் தேனீயைப் போன்ற கொடுக்கு காணப் படுகின்றது. கொடுக்கினால் மனிதரை கொட்டும்போது, அந்த கொடுக்கு சருமத்தில் தங்கி விடுகின்றது.



### காட்டுக் குளவி

*காட்டுக் குளவிகள் 'வெஸ்பிடே' (Vespidae) குடும்பத்தைச் சேர்ந்தவை. Vespa affinis என்பது இலங்கையில் காணக் கூடிய காட்டுக் குளவி இனமாகும். இவை தேனீ மற்றும் குளவி இனங்களை விட, அளவில் சற்றுப் பெரிய உடலமைப்பினைக் கொண்டவை. கூடுகளை அமைத்து வாழும். நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் உயரமான இடங்களில் இவற்றின் கூடுகளை காணலாம். இவை இறந்த விலங்குகளின் உடல்கள் உட்பட; அனைத்தையும் உட்கொள்கின்றன. இவையும் கொடுக்கினைப் பயன்படுத்தி தாக்குகின்றன.*



### தேனீ, குளவி, காட்டுக் குளவி என்பன கொட்டினால் ஏற்படக்கூடிய நோய் பாதிப்பு அறிகுறிகள்

- ★ பாதிக்கப்பட்ட இடத்தில் அரிப்பு
- ★ சிவப்பு புள்ளிகள்
- ★ முகம் வீங்குதல்
- ★ சுவாசிப்பதில் சிரமம்
- ★ வாந்தி
- ★ வயிற்று வலி
- ★ இரத்த அழுத்தம் குறைதல்

இவற்றை தவிர, மோசமான உடலியல் பாதிப்புகளும் ஏற்படக்கூடும். இதன்போது சிறுநீரகங்கள் செயலிழப்பு, இதய செயற்பாடு தடைப்படுதல், நரம்புக் கோளாறுகள், மூளையில் உட்புற இரத்தக் கசிவு போன்ற நோய் அறிகுறிகளை காணலாம்.



### இவற்றில் இருந்து பாதுகாப்புப் பெற...

- ★ இவை பரவலாக உள்ள பகுதிகளில் இனிப்பு உணவுகளை திறந்த நிலையில் எடுத்துச் செல்வதையும் உட்கொள்வதையும் தவிர்க்க வேண்டும்.
- ★ இவை பரவலாக உள்ள பகுதிகளுடாக பயணிக்கும்போது உடலை முழுமையாக மறைக்கும் ஆடைகள், சப்பாத்துக்களை அணிதல். பிரகாசமான நிறத்திலான ஆடைகள் அணிந்து செல்வதை தவிர்த்தல்.
- ★ வாசனைத் திரவியங்களைத் தவிர்த்தல்.
- ★ இவற்றின் இருப்பிடங்களுக்கு கல்லெறிதல், தொந்தரவு செய்தல் போன்றவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

### முதலுதவி


- ★ கொடுக்குகளை கவனமாக அகற்றுதல்.
- ★ பாதிக்கப்பட்ட இடத்தினை சவர்க்காரம் இட்டு நன்கு கழுவுதல், (ஐஸ் கட்டிகளை வைப்பது சிறந்த பலன் அளி
- ★ வலி நிவாரணிகளை உட்கொள்ளல்.
- ★ விரைவாக மருத்துவமனை எடுத்துச் செல்லல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேள்

தேள்கள் பூச்சிகளை உணவாக உட்கொள்பவை. இவை இரவில் நடமாடும் இயல்புடைய ஓர் உயிரினமாகும். இவற்றுக்கு முன்னோக்கியதாக இரண்டு பெரிய கொடுக்குகளும் வாலின் முனையில் விஷத் தன்மை கொண்ட கொடுக்கும் உண்டு. பகல் பொழுதில் நிலப் பொந்துகளிலும் மரப்பொந்துகளிலும் வசிக்கும் இவை, மழை நாட்களிலேயே வீடுகளை நோக்கி வருகின்றன. தேள்கள் விஷத் தன்மை வாய்ந்த ஓர் உயிரினமாகும்.



### தேள் கொட்டினால்...

★ இதயத் துடிப்பு அதிகரிக்கும்.
★ இரத்த அழுத்தம் அதிகரிக்கும்.
★ அதிக வியர்வை சுரக்கும்.
★ எச்சில் அதிகம் சுரக்கும்.
★ விஷம் தீவிரமானால் இரத்த அழுத்தம் குறையும்.
★ அதிர்ச்சி ஏற்படும்.
★ இதய செயற்பாடு தடைப்படும்.
★ மரணம் சம்பவிக்கலாம்.

இந்த நிலைமை ஒரு சில நிமிடங்களிலிருந்து சில மணித்தியாலங்கள் வரை தொடரலாம். உரிய மருத்துவ சிகிச்சைகள் மூலம் 24 முதல் 48 மணித்தியாலங்களில் நோயாளியைக் குணப்படுத்த முடியும்.

### பாதிப்பினைத் தவிர்ப்பதற்கு...

★ சப்பாத்துக்கள், காலுறைகள், பூட்ஸ்களை வீட்டிற்கு வெளியே வைக்காதீர்கள்.
★ காலுறைகள், சப்பாத்துக்களைப் பயன்படுத்தும் முன்னர் நன்கு பரிசோதித்துப் பாருங்கள்.
★ வீட்டுத் தோட்டங்களில் வேலை செய்யும்போது கையுறைகளை அணியுங்கள்.
★ இரவு நேரங்களில் வீட்டிலிருந்து வெளியில் செல்லும்போது காலணிகளை அணிந்து கொள்ளுங்கள்.



## கருஞ்சிலந்தி

இலங்கையில் உள்ள சிலந்தி வகைகளில் மிகவும் கொடிய விஷத் தன்மை கொண்ட சிலந்தி இனமாக Latrodectus பேரினத் திற்குரிய கருஞ்சிலந்தியை (Black widow) குறிப்பிடலாம். தென்னை மரப்பொந்துகள் இவற்றின் வாழிடமாகும். இவற்றின் விஷத்தில் Serotonin மற்றும் histamine ஆகிய ரசாயனங்கள் உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### கருஞ்சிலந்தியை இனங்காணல்

★ கருமை நிறத்தில் காணப்படும்.
★ உடலில் மெல்லிய நார்கள் போன்ற மயிர்களைக் காணலாம்.
★ பெண் சிலந்தியின் உடலில் செந்நிறப் புள்ளியொன்று காணப்படும்.

### நோய் அறிகுறிகள்

★ தீண்டிய இடத்தில் வலி
★ வீக்கம்
★ வயிறு மற்றும் மார்பில் வலி
★ மூட்டுகளில் வலி
★ வாந்தி ஏற்படல், எச்சில் சுரத்தல்
★ அதிக வியர்வை
★ தசைப்பிடிப்பு மற்றும் தசையில் வலி
★ மனக் குழப்பம் மற்றும் அமைதியின்மை

### முதலுதவி

★ பாதிக்கப்பட்ட இடத்தில் ஐஸ் கட்டிகளை வைத்தல்.
★ பெரசிட்டமோல் போன்ற வலி நிவாரணிகளை உட்கொள்ளல்.
★ விரைவாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லல்.

**‘வயது வந்தவரொருவர் சுமார் 500 பூச்சிகளின் கூட்டு தாக்குதலுக்கு ஆளானால் மரணம் சம்பவிக்கலாம். சிறு பிள்ளையெனின், 30 பூச்சிகளின் கூட்டுத் தாக்குதலுக்கு ஆளானால் மரணம் சம்பவிக்கும் என ஆய்வுகளில் தெரியவந்துள்ளது’**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சவூதி அரேபியாவில் முடியாட்சி நிலவுகின்றது. சல்மான் பின் அப்துல்லாசிஸ் அல் சவுத் அந்நாட்டின் மன்னர் ஆவார்.



# சவூதி அரேபியா

அரேபியாவில் இரண்டாவது பெரிய நிலப்பரப்புக்குச் சொந்தமான நாடாக விளங்கும் சவூதி அரேபியா முன்னேற்றகரமான ஒரு பொருளாதார நாடாகும். உலகின் இரண்டாவது மிகப் பெரிய எண்ணெய் வள நாடும் இதுவே. ஒட்டோமன்களுக்கு எதிராக மேற்கொண்ட போராட்டங்களின் விளைவாக 1932 இல் இன்றைய சவூதி அரேபியா நாடு தோற்றம் பெற்றது. 1938 இல் பாரசீக வளைகுடா கடற்கரை வலயத்தில் கனிய எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்டபின் அந்நாட்டின் பொருளாதாரம் விரைவாக வளர்ச்சி அடைந்தது.



இபின் சவுத் மன்னர் (1876-1953) அந்நாட்டின் முதல் மன்னர். (1932-53)

## தேசிய மிருகம்



அராபிய குதிரை, அராபிய ஓநாய், அராபிய செந்நரி மற்றும் அராபிய ஒட்டகம் என்பன தேசிய மிருகங்களாகும். தேசிய பறவையோ, மலரோ இல்லை

## இனங்கள்





## மொழி

அராபிய மொழி உத்தியோகபூர்வ மொழி ஆகும்.

## சமயம்

இஸ்லாம் 100%



சவூதி அரேபியாவில் தொழில் நிமித்தம் ஆசியர், ஆபிரிக்கர், தென்கிழக்காசியர் பெருந்தொகையாக வாழ்கின்றனர்.

ஜனாதிபதி அந்நாட்டின் பிரதமராகவும் உள்ளார்.

## அரசியல்

நாடாளுமன்றக் கட்டடம்.



பதில் பிரதமர் - சல்மான் பன் அப்துல்சீஸ் அல் சௌத் (மன்னரின் மகன்)


இரண்டாம் உதவி பிரதமர் - முக்ரின் பின் அப்துல்சீஸ் அல் சௌத்.

## இயற்கை வளம்

இயற்கை வாயு, இரும்பு, பெற்றோலியம், தங்கம், செம்பு

வருடாந்தம் நடைபெறும் ஒட்டகப்போட்டி உலகப் புகழ் பெற்றது.





எண்ணெய் வளம் நாட்டின் முக்கிய வருமான மார்க்கமாகும்.

## தலைநகரமும் பெரிய நகரமும்












நாணயம் - சவூதி ரியால்



புனித நகராகிய 'மக்க மா நகர்' சவூதி அரேபியாவிலேயே அமைந்துள்ளது.



சவூதி அரேபிய ஆண்/ பெண் பாரம்பரிய உடைகள்

பாரம்பரிய நடனம்





'ஷரியா' சட்டம் அமுலில் உள்ளது.

கோதுமை, சோளம், பழவகைகள், காய்கறிகள் மற்றும் பால் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றது. கோழிகளும் வளர்க்கப்படுகின்றன. ஏற்றுமதிக்காக மலர்கள் வளர்க்கப்படுகின்றன. பாலைவனத்தில் பருவகால பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படும் விதம்





அந்நாட்டுக்கே உரித்தான பல உணவு வகைகள் உள்ளன.

நாடு பூராகவும் இஸ்லாமிய பள்ளிவாசல்கள் உள்ளன.



---

# எமது உலகம்

# சிறுவர் கதை நூல் ஆக்கம்

ஊடக அனுசரணை: விஜய்

பாடசாலை மாணவர்களின் ஆக்கபூர்வமான படைப்பாற்றல்கள் மற்றும் ரசனை திறன் ஆகியவற்றை மேலும் விருத்தி செய்து திறமைமிகு எதிர்கால சந்ததியொன்றை உருவாக்கும் நோக்கில் கல்வி அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்டத்தின் கீழான பாடசாலை மாணவர்களுக்கான சிறந்த சிறுவர் கதை நூலுக்கான தெரிவுப் போட்டி.....



## போட்டி விதிமுறைகள்:

மாவட்ட மட்டத்தில் பாலர், கனிஷ்ட, சிரேஷ்ட ஆகிய 03 பிரிவுகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தனித் தனியாக போட்டிகள் நடாத்தப்படும். மேற்குறித்த பிரிவுகளில் கிடைக்கப்பெறும் ஆக்கங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடங்கள் தெரிவுசெய்யப்படும். மேலும், மாவட்ட மட்டத்தில் விசேட திறமை காண்பிக்கும் ஆக்கத்தினை தெரிவுசெய்து அதற்கு சான்றிதழ் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் முதலாவது இடத்தினை பெறும் படைப்பு தேசிய மட்டப் போட்டிக்காக சமர்ப்பிக்கப்படும்.

அது தவிர, மாவட்ட மட்டத்தில் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்படும் சிறுவர்களுக்கு பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டு அவர்களின் படைப்பாற்றலை மேலும் விருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள் நடைபெறும். தேசிய மட்டப் போட்டிக்கென தெரிவாகும் 25 மாவட்டங் களையும் சேர்ந்த படைப்புக்கள் நூல் வடிவில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அச்சிடப்பட்டு, 2017 ஒக்டோபர் 01 ஆம் திகதியன்று உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு நூலினை கல்வி அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பவற்றினால் வெளியிட்டு வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.



## போட்டி நிபந்தனைகள்:

i. அனைத்து சிறுவர் நூல்களும் 16 பக்கத்திற்கு மேலாக இருத்தல் வேண்டும். (ஒரு பக்கத்தின் அளவு A4 அளவாக இருத்தல் வேண்டும்)
ii. போட்டியில் பாடசாலை மாணவர்கள் மாத்திரமே பங்குபற்ற முடியும்.
iii. சமர்ப்பிக்கப்படும் போட்டிப் பிரிவுகளின் வயதெல்லை
   * பாலர் பிரிவு (தரம்-1 தொடக்கம் தரம்-5வரை)
   * கனிஷ்ட பிரிவு (தரம்-6 தொடக்கம் தரம்-9 வரை)
   * சிரேஷ்ட பிரிவு (தரம்-10 தொடக்கம் தரம்-13 வரை)
iv. தேசிய அல்லது சர்வதேச நூல்களை மொழிபெயர்த்தல், தழுவல் அல்லது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பிரதிபண்ணல் கூடாது.
v. சிங்களம், தமிழ், ஆங்கிலம் மொழிகளில் வெவ்வேறாக போட்டிகள் நடாத்தப்படும்.
vi. படைப்புக்கள் உங்கள் பாடசாலைக்கு உரித்துடைய பிரதேச செயலகத்தில் அல்லது மாவட்டச் செயலகத்தில் உள்ள கலாசார உத்தியோகத்தரிடம் கையளித்தல் வேண்டும்.

* திகதி 2017 ஜூலை 25

## இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்டம்

### சிறுவர் கதை ஆக்கம் - மாதிரி விண்ணப்பப்படிவம்

1. முதலெழுத்துகளுடன் பெயர்: ..........
2. பாடசாலை: ..........
3. பாடசாலை முகவரி: ..........
..........
4. தொலைபேசி:
   பாடசாலை: .......... வீடு: ..........
5. மாவட்டம்: ..........
6. பிரதேச செயலக பிரிவு: ..........
7. படைப்பு சமர்ப்பிக்கப்படும் மொழி: ..........
8. சமர்ப்பிக்கப்படும் போட்டிப் பிரிவு
   (பாலர்/ கனிஷ்ட/ சிரேஷ்ட) ..........
   பெயர் .......... தரம்..........
   கதையாக்கம்..........
   கையொப்பம்: ..........

மேற்குறிப்பிட்ட இந்த விண்ணப்பப்படிவத்துடன், சமர்ப்பிக்கப்பட்ட சிறுவர் கதைப் படைப்பு .......... மாணவன்/ மாணவியுடையது என்பதுடன், மேற்குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையெனவும் மற்றும் சரியானதெனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

வகுப்பு ஆசிரியரின் பெயர்: ..........

ஒப்பம்: .......... திகதி: ..........

போட்டி விண்ணப்பப்படிவத்தை சான்றுப்படுத்தி சமர்ப்பிக்கின்றேன்.

.......... ..........
(அதிபரின் கையொப்பம்) (திகதி)
(அதிபரின் பதவி முத்திரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச இளம் விஞ்ஞானிகள் போட்டியில்

# இலங்கை மாணவனுக்கு வெள்ளிப் பதக்கம்


பாடசாலையில் ஆராய்ச்சிகள் தொடர்பான பொறுப்பாசிரியையுடன்

ஜேர்மனில் நடைபெற்ற சர்வதேச இளம் விஞ்ஞானிகளுக்கான மாநாட்டில் (International Conference for young Scientist) நடைபெற்ற சிறந்த இளம் விஞ்ஞானிகளுக்கான போட்டியில் இலங்கை மாணவன் லக்கிந்து விக்ரமரத்ன இரண்டாவது இடத்தை வெற்றிகொண்டுள்ளார். இவர் கொழும்பு நாலந்தா கல்லூரியில் பயிலும் மாணவராவார். தனது வெற்றி குறித்து அவர் தெரிவித்திருப்பதாவது...

### அறிமுகம்

நான் முதலாம் ஆண்டு முதல் கொழும்பு நாலந்தா பாடசாலையில் கல்விகற்று வருகின்றேன். இப்பொழுது 10ஆம் தரத்தில் கல்வி கற்கின்றேன். எனது தந்தையார் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் நுண் ஆய்வுத்துறை விஞ்ஞானியாகக் கடமையாற்றுகின்றார். தாயார் மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் குருதி மாற்று சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றுகின்றார்.


நாலந்தா கல்லூரி அதிபர்


லக்கிந்து

### ஆய்வு குறித்து...?

நான் பூக்களின் மகரந்த ஒவ்வாமை குறித்து ஆய்வு செய்தேன். எம்மைச் சூழவுள்ள மாசடைந்த வளி (காற்று) பூக்களின் மகரந்தத்தில் இணையும் போது ஏற்படும் ஒவ்வாமை குறித்தே நான் ஆய்வு செய்தேன். இவ்வாறு மாசடைந்த வளியானது மகரந்தம் மீது சேர்வதால் மகரந்த ஒவ்வாமை தீவிரமடையக் கூடும் என்று நான் இந்த ஆய்வின் மூலம் கண்டறிந்தேன்.

### எங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது?

கொழும்பிலும், கிராமியப் பகுதிகளிலும் மகரந்தங்களின் வேறுபாடுகளை வெவ்வேறாக ஆய்வு செய்து கண்காணித்தேன். இங்கு நகரப்புற மகரந்தங்களில் கிராமப்பகுதி மகரந்தங்களை விட வேறுப்பட்ட தன்மையினை அவதானிக்க முடிந்தது.

### இது தொடர்பான வேறு ஆய்வுகள்?

இது தொடர்பாக இலங்கை நெனோ தொழினுட்ப நிறுவனத்துடன் இணைந்து மேலும் ஒரு ஆராய்ச்சியினை செய்தேன். சக்தி பரவலின் அடிப்படையில் இரசாயன தர ஆய்வு ஒன்றினை மேற்கொண்டேன். அதன்படி, மாசடைந்த காற்று உள்ள மகரந்தங்களில் சாதாரண மகரந்தங்களை விட நைதரசன் சதவீதம் அதிகமாகக் காணப்பட்டதை அறிய முடிந்தது. சாதாரண மகரந்தங்களில் நைதரசன் சதவீதம் 5 முதல் 10 சதவீதமாகக் காணப்படுகின்றது. வளி மாசடைந்த மகரந்தங்களில் நைட்ரஜன் சதவீதம் 5 சதவீதத்தினை விட அதிகமாக உள்ளது. கிராமப்பகுதி மகரந்தங்களில் காபன், நைட்ரஜன், ஒட்சிசன் ஆகியவற்றினை மட்டும் காண முடியும். எனினும் நகர்ப்புற மகரந்தங்களில் அலுமினியம், குளோரின் ஆகிய பலவற்றினை காணக் கூடியதாக உள்ளது. இதன்படி வளி மாசடைந்த மகரந்தங்களில் வேறுபாடுகள் இருப்பதனை நிரூபிக்க முடிந்தது.

## மகரந்த ஒவ்வாமையை ஏற்படுத்தும் வளிமாசடைவு குறித்த சிறந்த ஆராய்ச்சி...


போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்றபோது

### ஆராய்ச்சியை மேற்கொண்ட காரணம்...?

நான் சிறு வயது முதல் பல தடவைகள் ஒவ்வாமைகளினால் பாதிப்படைந்துள்ளேன்.எனவே, இவ்வாறான பாதிப்பினை எதிர்கொண்டவன் என்பதனால் இவை குறித்து ஆராய்ந்து தீர்வுகளைத் தேடும் ஆர்வத்தினைக் கொண்டிருந்தேன். ஆகவே, முதலில் நான் மகரந்த ஒவ்வாமை குறித்து ஆய்வு செய்யத் தீர்மானித்தேன். ஏனெனில், ஒவ்வாமை பாதிப்புக்குள்ளானவர்களில் 5 சதவீதமானவர்கள் மகரந்த ஒவ்வாமையினால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இந்த ஆராய்ச்சி பற்றிய கருத்துக்கள்

கடந்த ஆண்டு கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட தேசிய விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கான போட்டியில் எனக்கு முதல் இடம் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து ஜேர்மனியில் நடைபெற்ற சர்வதேச இளம் விஞ்ஞானிகள் தெரிவில் இரண்டுபேர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இதில் ஒருவராக நான் தெரிவாகி வெள்ளிப் பதக்கத்தை வென்றேன். மகரந்த ஒவ்வாமை பற்றிய ஆராய்ச்சியினை இங்கு சமர்ப்பித்திருந்தேன். இதில் பல நாடுகளையும் சேர்ந்த போட்டியாளர்கள் மத்தியில் இரண்டாவது இடத்தினை நான் பெற்றுக்கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெஸ்கோ குகை ஓவியம்






பிரான்சில் உள்ள டோர்டோங் பிரதேச குகை ஒன்றில் இந்த அபூர்வமான ஓவியங்களை காணலாம். 1940 ஆம் ஆண்டில், காணாமல் போன நாயொன்றினை தேடிச் சென்ற சில பிள்ளைகள், இந்த குகையை கண்டுள்ளனர். பைசன் மாடுகள், காட்டுக்குதிரைகள், துருவ மான்கள் என்பனவற்றின் உருவங்கள் இங்கே ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. இங்கு சுமார் 60 குதிரை உருவங்களையும், 20 மாடுகளின் உருவங்களையும் காணலாம். இவற்றுள் 17 அடிகள் நீளமான மாட்டின் உருவம் விசேட கவனிப்பிற்குரியதாகும். இதே குகையின் இன்னுமொரு இடத்தில், 15 அடிகள் நீளமான ஆறு கறுப்பு நிற மாடுகளின் உருவங்களையும் காணலாம். வேகமாக முன் நோக்கிப் பாயும் பசுக்களின் உருவம் இவற்றுள் முக்கியமானதாகும். இவை மிக தத்ரூபமாக வரையப்பட்டுள்ளன. மஞ்சள், கபிலம் மற்றும் கறுப்பு நிறங்களில் வரையப்பட்டுள்ள இந்த உருவங்கள் மிகவும் உயிரோட்டம் கொண்டவை. வெளிக்கோடுகள் கறுப்பு நிறத்தில் வரையப்பட்டுள்ள இந்த ஓவியங்களுள், கழுத்து வரையில் நீரில் மூழ்கிய நிலையில் காணப்படும் மான்களின் உருவங்கள் பெரிதும் கவனத்தை ஈர்க்கின்றன.

விலங்குகளின் உருவங்களை தவிர, சில மனிதர்களின் உருவங்களையும் மனித உருவங்களை குறியீடுகளாகவும் இங்கு காட்டப்பட்டுள்ளன. வரலாற்றுக்கு முற்பட்ட யுகத்தில், மனிதனின் உருவங்கள் மனிதனாலேயே வரையப்படுவது மிக அபூர்வமாகும். பெரும்பாலும் தாம் வேட்டையாடும், அல்லது வேட்டையாடும் போது காணும் விலங்குகளின் உருவங்களை வரைவதையே பெரிதும் காணக்கூடியதாக இருக்கும். மனித உருவம் சிறப்பாக வரையப்பட்டுள்ள ஓவியமும் இங்கே உள்ளது. காயமடைந்த பைசன் மாடொன்றின் அருகில் ஒரு மனிதனும், பறவையும் இருப்பதை போல அது வரையப்பட்டுள்ளது. மாடு கபில நிறத்தில் நிறம் தீட்டப்பட்டு, வெளிக்கோடு கறுப்பு நிறத்தில் வரையப்பட்டுள்ளது. மனிதனும், பறவையும் அவற்றுக்கு பொருத்தமான நிறங்களில் வரையப்பட்டுள்ளன.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதரின் நடவடிக்கைகளையே, இந்த ஓவியங்கள் எடுத்துக் காட்டுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஒரிக்னேஷியன் மனிதர்களால் வரையப்பட்டதாக நம்பப்படும் இந்த ஓவியங்கள், அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்தும் ஊடகமாக அமைகின்றது.








-ரஞ்சித் ஜெயகர்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடநூலில் விஷம் இல்லையாம்...?



மாணவர்களின் உடல் ஆரோக்கியத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய 5 லட்சம் பாடநூல்கள் அச்சிடப்பட்டிருப்பதான குற்றச்சாட்டு தொடர்பாக, பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. ரூபா 15 கோடி செலவில் அச்சிடப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்ற இந்த பாடநூல்களுக்கு கடதாசிக்குப் பதிலாக 'சின்தட்டிக்' முறையிலான செயற்கைத் தாள்களே பயன்படுத்தப்பட்டுள்ளதாம். எனவே, இந்த 'சின்தட்டிக்' தாள்கள் பிள்ளைகளின் உடல் ஆரோக்கி யத்திற்கு கெடுதியை ஏற்படுத்தும் ஆபத்து இருப்பதாகவும் இது தொடர்பான எந்தவொரு ஆய்வும் மேற்கொள்ளப்படாமலேயே இவை அச்சிடப்பட்டிருப்பதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

> **சின்தட்டிக் முறையிலான செயற்கைத் தாளில் அச்சடிக்கப்பட்ட பாடநூல்களை பயன்படுத்துவதால் மாணவர்களின் உடல் ஆரோக்கியம் கெடும் என பரவியுள்ள பிரச்சாரம்**

அச்சிடப்பட்ட 5 லட்சம் நூல்களில் 2 லட்சம் நூல்கள் ஏற்கனவே மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் இவை 7 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான புவியியல் பாடத்திற்கான நூல்களாக அச்சிடப் பட்டே விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. எனவே, இத்தகைய நூல்களை பயன்படுத்துவதன்மூலம் பிள்ளைகளின் கண்கள் மற்றும் சருமப் பகுதிகளில் சுகாதாரக் கோளாறுகள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள்



இருப்பதாகவும் அத்துடன், நுரையீரல் மற்றும் நரம்புக் கோளாறுகளும் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டுத்தொடர்பாக, கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதாகவும், இதுபற்றிய உண்மை நிலையை ஆராய்வதற்கென சிறப்புக் குழுவொன்றை அமைத்து அறிக்கையொன்றை அவர் பெறவிருப்ப தாகவும் அறிய வருகின்றது.

## 'இதில் எந்தவித உண்மையும் இல்லை'

### தேசிய கல்வி நூல் வெளியீட்டு ஆணையாளர் மறுப்பு

**மேற்படி குற்றச்சாட்டுத் தொடர்பாக, தேசிய கல்வி நூல் வெளியீட்டு ஆணையாளர் ஐ.எம்.கே.பி.இலங்கசிங்க தெரிவித்திருப்பதாவது;**

"இந்த குற்றச்சாட்டில் எவ்வித உண்மையும் இல்லை. இது தொழில்நுட்ப தரப்படுத்தல் கமிட்டியின் அனுமதி பெறப்பட்ட ஒரு திட்டமாகும். தர நிர்ணய சபைக்கும் இதில் எவ்வித குழப்பமும் கிடையாது. இலங்கை மற்றும் ஜப்பான் நாடுகளில் இதற்கான தரச்சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இப்போதும் ஜப்பானில் இவ்வகை நவீன கடதாசியில்தான் புத்தகங்கள் விற்பனையில் உள்ளன. இலங்கையில் வெள்ள அனர்த்தங்களின்போது மாணவர்களின் பாடநூல்கள் நீரில் நனைந்து அழிவடைந்ததைக் கண்ணுற்றோம். இதனைக் கருத்தில் கொண்டே சின்தட்டிக் முறையிலான நூல்களை அச்சிட்டோம். மழையிலோ, வெள்ளத்திலோ, சேற்றிலோ பாதிப்பு ஏற்பட்டாலும் மீண்டும் அவற்றை கழுவிப் பயன்படுத்தத்தக்கதாக இருக்கும். இதனால்தான், பிளாஸ்டிக் தரத்திலான நவீன கடதாசியை பயன்படுத்தும் இந்த வழிமுறையை கையாண்டுள்ளோம். அத்துடன், இவ்வகை நூல்களை நீண்ட காலத்திற்கு பயன்படுத்தவும் முடியும்.



மேலும், இந்த நவீன அச்சடிப்பு முறையிலான நூல்களின் பாவனை இலங்கைக்கு ஒத்துவருமா? இல்லையா? என்பதை அடுத்து வரும் 5 வருட காலத்தில் பரீட்சித்துப் பார்க்கவுள்ளோம். எனவே, இதனையிட்டு எவரும் அச்சமடையத் தேவையில்லை. அப்படி ஏதும் இருந்திருந்தால் இதுவரை ஆசிரியர்களோ, அதிபர்களோ, பெற்றோரோ எவராவது புகார் செய்திருப்பர். ஆனால், அப்படி ஏதும் நடக்கவில்லை. சிலரது தனிப்பட்ட வர்த்தக தேவைகளுக்காக புனையப்பட்ட கட்டுக்கதையே இவ்வாறு தவறான பிரச்சாரங்களை ஏற்படுத்தியுள்ளன" என்றார்.





## போட்டி வெற்றியாளர்கள் தெரிவு...



**அன்பு வாசகர்களே,**

'விஜய்' பத்திரிகையின் 14 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு கூப்பன் போட்டி, பொது அறிவுப் போட்டி, கட்டுரைப் போட்டி என மூன்று விதமான போட்டிகள் நடைபெற்றதை அறிவீர்கள்.

இந்த போட்டியில் வெற்றியாளர்கள் தெரிவுகள் நடைபெற்று வருகின்றன.

ஏராளமானவர்கள் இப்போட்டிகளில் கலந்துகொண்டமையினால் வெற்றியாளர்களை தெரிவுசெய்வதில் சற்றுக் காலதாமதம் ஆகியுள்ளது. கூடிய விரைவில் வெற்றியாளர்களின் பெயர் விபரங்கள் அறிவிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

நன்றி

இப்படிக்கு
**ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பூனை வளர்த்தால் நோய்கள் தீருமாம்!

உலகில் அதிகமானோரால் வளர்க்கப்படும் செல்லப்பிராணி நாய் ஆகும். நாய்களுக்கு அடுத்த இடத்தை பிடித்திருப்பவை பூனைகள். பூனைகளை



வளர்ப்பவர்களுக்கு இதயக் கோளாறு, இரத்த அழுத்தம், பக்கவாதம் போன்ற நோய்கள் ஏற்படுவது குறைவாக இருப்பதாக ஆய்வொன்றின்மூலம் தெரியவந்துள்ளது. உலகில் பூனைகளை அதிகம் வளர்ப்பவர்கள் அமெரிக்கர்களாவர்.

# அதிகரித்து வரும் கடல் நீர் மட்டம்



கடந்த நூற்றாண்டில் இருந்ததைவிட, இந்த நூற்றாண்டில் கடல் நீர் மட்டம் அதிகரித்துள்ளதாக கூறப்படுகின்றது. 1993 ஆம் ஆண்டிலிருந்து கடல் நீர் மட்டம் உயர்வது இரண்டு மடங்காக அதிகரித்து வருகின்றது. ஆண்டுக்கு சராசரியாக 3.2 மில்லி மீற்றர் என்ற ரீதியில் இந்த உயர்வு காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. உலக வெப்பநிலை அதிகரிப்பின் காரணமாக பனிப் பாறைகள் கரைந்து வருவதே கடல் நீர் மட்ட உயர்வுக்குக் காரணமாகக் கூறப்படுகின்றது. இதனால், புயல்கள் வீசும்போது ஏற்படும் தாக்கமும் அதிகமாக காணப்படும் என்றும் சிறு தீவுகள் கடலுக்குள் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் கடல் ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.




உலக நாடுகளில், 64 நாடுகளின் தேசிய கொடிகளில் நட்சத்திர சின்னம் இடம்பெற்றுள்ளது.

அமேசன் காட்டின் ஒரு சதுர கிலோமீற்றர் நிலப்பகுதிக்குள் சுமார் 3,000 இற்கும் அதிகமான பூச்சியினங்கள் வசிக்கின்றன.

# தேங்காய் சேர்க்கலாமா..?





தேங்காயில் அதிக கொழுப்புச் சத்து இருப்பதாகவும், இதனால் தேங்காயை உணவில் அதிகம் சேர்க்கக்கூடாது என்றும் கூறக் கேட்டிருப்போம். ஆனால், தேங்காயில் உள்ள 'மொனோலோரின்' எனும் பதார்த்தம் இரத்தத்தில் உள்ள கொழுப்பைக் குறைக்க உதவுவதோடு, எமது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியையும் அதிகரிக்க உதவுகிறது. தேங்காயில் அதிகளவு நார்ச்சத்து அடங்கியிருப்பதால், உணவு ஜீரணமடைவதை சீராக்கி மலச்சிக்கலைப் போக்கும். அத்துடன், உடல் உஷ்ணத்தைத் தணித்து, உடலைக் குளிர்ச்சியாக வைக்கவும் தேங்காய் உதவுகின்றதாம்.

எமது நாக்கு சொறசொறப்பானது. இதனால், நாம் உணவு உண்ணும்போதும் பானங்களை அருந்தும்போதும் அவற்றின் சுவை நாக்கில் படிந்துவிடுகின்றது. இதனால், நாக்கில் அதிகளவில் பெக்டீரியாக்கள் உருவாகக்கூடும். எனவே, பல் துலக்கும்போது நாக்கினை சுத்தம் செய்ய வேண்டியது அவசியமாகும். நாக்கினை சரியான முறையில் சுத்தம் செய்யாவிடின் நாக்கிலிருந்து துர்நாற்றம் வீசும்.



# டைனோசர் நகரம்

அமெரிக்காவின் கொலராடோ மாநிலத்தில் 'டைனோசர்' (Dinosaur) என்ற பெயரில் ஒரு நகரம் அமைந்துள்ளது. இந்த நகரின் ஆரம்பகாலப் பெயர் 'Artesia' என்பதாகும். இதற்கு அருகில் அமைந்துள்ள டைனோசர் தேசிய நினைவுப் பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டதையடுத்து, 1966 ஆம் ஆண்டிலிருந்து இந்த நகரின் பெயர் 'டைனோசர்' என்று மாற்றம் பெற்றது. டைனோசர் நகரத்திலுள்ள பாதைகளுக்கும் டைனோசர்களின் பெயர்களே சூட்டப்பட்டுள்ளன.




இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2017, ஜூன் 21 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday June 21 , 2017.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org